www.padippakam.com

தமிழீழ விடுதலைப் புலிகள்

LIBERATION TIGERS OF THAMIL EALAM

# தாயகம்




மலர்-14 யூன் 1989

வெளியீடு:- தமிழர் நலன்புரி மன்றம் -டென்மார்க்

www.padippakam.com



# புறநானூற்றுக்குப் புதுமாலைசூடியவனே. இது உனக்காக...!

லெப். கேர்ணல் நவம்.
வீரமரணம் 04.05.1989.

ஓ.! எங்கள் மாவீரனே....!
உனது வீரத்திற்கு
ஒரு வரியெழுத எங்கள் மொழியில்
எங்கு தேடினும் வார்த்தைகள் இல்லை
தவறி ஒரு வரிஎழுதின் அது
உன் வீரத்தைக் குறைத்துவிடுமென அஞ்சி
அதையும் தவிர்க்கிறோம்..!
மாவீரனே..! உனக்காக,
உலகத் தமிழ் உள்ளங்களிலெல்லாம்
ஆயிரம் அஞ்சலிக் கோபுரங்கள்..!
புறநானூற்றுக்கு புதுமாலை சூடியவனே.!
உனது வீரத்திற்கு எமது
ஆழ்ந்த, உயர்ந்த மரியாதைகள்..!



படிப்பகம்

www.padippakam.com


# தாயகம்

மலர் - 14 யூன் 1989

## ஆசிரியர் அரங்கு.

இனியவர்களே.! கொஞ்சம் நில்லுங்கள்..!

தென்னிந்தியாவும் தமிழீழமும் மட்டும்தான் தமிழர்கள் வாழும் பகுதிகளல்ல. தமிழினமென்பது தனக்கென ஒரு நாடில்லாது உலகம் முழுவதும் சிதறுண்டுகிடக்கும் ஓரினமென்ற கூற்றை நாம் நமக்கென்று ஒரு நாட்டை அமைக்காதவரை இனி - மாற்றியமைப்பதென்பது முடியாத காரியமாகும்.

'எலிவளையானாலும் தனிவளை வேண்டு'மென்பது பழமொழி.

மலேசியா, சிங்கப்பூர், மொறீசியஸ், மாலைதீவென்று பல நாடுகளிலும் சிதறிக்கிடக்கும் தமிழர்களின் நெஞ்சங்களிலெல்லாம் கனல்விட்டெரியும் முதல்தர ஆதங்கம் நமக்கென்று ஒரு நாடில்லையே என்ற உணர்வுதான்.

"கல்தோன்றி மண்தோன்றும் முன்பே-வண்ணக்
கலையோடு மொழிகண்ட தமிழ் இனமே.!
வில்கொண்ட சேரர்தம் முடியும்-எழில்
மீன்போலும் விழிமாதர் பாண்டிய மரபும்
கொல்கின்ற புலிபோலும் சோழர் குலம் பெற்ற
இனங்கண்டு குணங்கொண்டு வாழும் தமிழினமே.!"

என்பது தமிழன் புகழைக் கூறும் ஒரு பழைய பாடல். இப்பாடலைப் படிக்கும்போது நம்முள்ளேயே ஒருவித மயிர்க்கூச்செறியும் உணர்வு. ஆஹா நமது தமிழினத்தின் புகழ் பாருங்கள் என்ற ஒருவித எழுச்சி ஏற்படுவது இயல்பு.

இப்படியான உணர்வுகளுக்குத் தீனிபோட்டுக் காலம்கழிப்பதில் பயனில்லையென்பதை உணர்ந்து கொண்டுதான்பாரதி

"வீணே நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர்
மகிமையில்லை..!!

என்று நாசூக்காக சொல்லிவைத்தார்.

நாம் பெருமைப்படக் கூடியளவுக்கு ஒரு காலத்தில்தமிழினம் வாழ்ந்திருக்கிறது என்பதை இங்குநாம் மறுக்கவரவில்லை. ஆனால் பிற்பட்டகாலத்து தமிழினவரலாறு பெரும் வீழ்ச்சிப் போக்கினையே காட்டிநிற்பதை யாரும் மறுக்கமுடியாது.

சென்ற காலங்களில் பல வளர்ந்தநாடுகளின் கணிப்பீடுகள் பெரும்பாலான நாடுகளில் வதியும் தமிழர்களை கூலிகளாகவும், வறியவர்களாகவும், உரிமையற்றவர்களாகவுமே அடையாளம் காணமுற்பட்டுள்ளன என்பதும் புதியவிடயமல்ல.

கடந்த காலங்களில் இலங்கை அரசினால் வெளியிடப்பட்ட பல நூல்கள் மேலைத்தேயத் தூதராலயங்களினூடாக இங்கும் விநியோகமாகியிருக்கின்றன. அதிலெல்லாம் ஈழத்தமிழினத்தை தேயிலைத் தோட்டங்களில் வேலைசெய்வதற்காக தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட கூலிகளாக முத்திரைகுத்துவதற்கு பகீரதப் பிரயத்தனமெடுக்கப்பட்டிருப்பதை நாம் வரிக்குவரி வாசித்தறிய முடிகிறது.

கீழைத்தேயத்தின் பெருந்தோட்டப் பொருட்கள் மேலைத்தேயங்களில் எந்தளவுதூரம் புகழ்பெற்றதோ அதேயளவு அவற்றுடன் தொடர்புபட்டு தமிழர்களையும் அடிமைஉணர்வுமிக்க கூலிகளாகக்காட்டும் பாங்கும் கூடவே பிரபலம் பெற்றுவந்ததை நாம் வருத்தத்துடன் அவதானிக்கவேண்டியிருக்கிறது.

எங்குபார்த்தாலும் தமிழனென்றால் அவன் மற்றைய இனங்களால் நசுக்கப்படுவபனாகவும், கூனிக்குறுகி, பல்லைக்காட்டி வாழவேண்டிய இக்கட்டான நிலையில் சிக்கித்தவிப்பவனாகவும் வாழவேண்டிய அவல நிலையை நாம் எங்கும் பரவலாகவே அவதானிக்கமுடிகிறது.

எமது இனத்திற்கு ஏற்படுத்தப்பட்ட இந்த இழிவுநிலைக்கு தற்பொழுது ஒரு பெரிய முற்றுப்புள்ளி விழுந்திருப்பதை தை நாம் இங்கு மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

முன்னர் சிங்கள இராணுவத்தை ஈழத்தில் முகாம்களுக்குள் அடைத்துவைத்து மகத்தான சாதனை புரிந்தவர்கள்நமது தமிழர்களே..!

ஆசியாக் கண்டத்தின் வல்லரசு.! மிகப்பிரமாண்டமான இராணுவபலம் கொண்டது என்றெல்லாம் புகழப்பட்டஇந்திய உபகண்டத்தையே கடந்த இரண்டுவருடங்களாக ஆட்டங்காணச்செய்து, வீரசாதனை புரிந்துவரும் அந்தத் தமிழீழவிடுதலைப்புலிகள் நமது தமிழரே.! என்று மலேசியா, சிங்கப்பூர், மொறீசியஸ், போன்ற பல நாடுகளிலும் வாழும் தமிழ

ர்கள் எமது போராட்டம் கண்டு, நமது இனத்தின் எழுச்சி-கண்டு, தற்போது தாமும் தமிழரென்று தலைநிமிர்ந்து கூறக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கிறார்கள்.

இந்தவகையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு உலகெல்லாமிருந்து, அங்கு வாழும் தமிழ்மக்களின் வாழ்த்துக்களும் - போராட்டத்தை உற்சாகப்படுத்தும் கடிதங்களும் தினசரி குவிந்தவண்ணமேயுள்ளன.

இது ஒருபுறமிருக்க தமிழ்நாடு தவிர்ந்த இந்தியாவின் - ஏனைய மாநிலங்களில் வாழும் தமிழ்மக்கள் (மாற்று மாநில மக்களால் நசுக்கப்பட்டவர்களாக வாழ்ந்தவர்கள்) தற்போது, 'இந்திய இராணுவத்தையே ஆட்டம்காணவைத்த விடுதலைப்புலிகள் நமது தமிழரே.!' என்று புலிகளின் வீரத்தின் மீது உரிமைகொண்டாடி, எம்மை நசுக்கமுற்பட்டால் நாமும் விடுதலைப்புலிகளாக மாறிவிடுவோமென எச்சரித்து தம்மை நசுக்கியவர்களை நோக்கி வீரமாக நெஞ்சை நிமிர்த்திநடப்பதாகவும், தமக்கு இதுவரை கிடைத்துவந்த அவமரியாதைகள் அழிந்து ஒரு பெரியமாற்றமாக, தமக்கு மற்றவர்கள்-மத்தியில் மதிப்பேற்பட்டுள்ளதாக ஏராளம் கடிதங்களையெழுதியவண்ணமுள்ளனர்.

மாற்றுமொழிபேசும் இந்திய மாநிலங்களில் தமிழனென்றால் தற்போது ஒரு மரியாதை.! கௌரவம்.!

உலகமெல்லாம் வாழும் தமிழினமே தமிழீழ விடுதலைப்புலிகளின் இந்த மகத்தான போராட்டத்தால் தலைநிமிர்ந்து நிற்பதாக குரல்கொடுக்கிறது.

எம்மினத்தை அடிமைகளாக, கூலிகளாக, அடையாளம்காணமுற்பட்ட மேலைத்தேயத்தவரே தற்போது நம்மை வீரம் செறிந்த இனமாகவும், சுதந்திரத்தின் பெருமையை உணர்ந்த மக்கள் குழுவாகவும் கருதும் ஒரு சிந்தனைமாற்றம் கூடதற்போது சர்வதேச அரங்கில் வேகமாக நகர்ந்துகொண்டிருக்கிறது.

தொண்ணூற்றியொரு வயது நிரம்பிய முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ.விஸ்வநாதம் அவர்களே, கடந்த 2000மிரம் ஆண்டுகால தமிழின வரலாற்றில் நமது தலைவர் பிரபாகரனைப்போல ஒரு வீரன் இதுவரைதோன்றவில்லையென கடந்தமாதம் வர்ணித்துள்ளார்கள்.

கோடிகோடி கொட்டிக்கொடுத்தாலும் பெறமுடியாத "வீரம் செறிந்த" இனமென்ற இந்த மகத்தான பெருமையை இன்று நமது இனத்துக்குத் தேடித்தந்தவர்கள் யார்? உங்கள் நெஞ்சங்களைத் தொட்டுக்கேளுங்கள் அது தமிழீழ விடுதலைப்புலிகளே..! என்று சந்தேகமல்லாமல் பதில்கூறும்.

இந்த நிலையில்-

www.padippakam.com



ஈழமண்ணில் பிறந்த நம்மில் சிலர், இங்கு வெளிநாடுகளில்ஐ-ரோப்பிய சுகங்களில் மூழ்கி நமது போராட்டத்தை கேவலப்படுத்தும் கேலிப்பேச்சுக்களில் காலங்கடத்துகிறார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகளை இகழ்வதே சிலரின் பொழுது போக்காகவும் இருப்பதைக்காண்கிறோம். இந்த நிலையில்-உங்களுக்கு நாம் ஒன்றைச்சொல்லிக்கொள்கிறோம், நாம்என்றோஒருநாள் நமது தாயகம் திரும்பியேயாகவேண்டியதேவை நமது அருகில் சாசுவதமாகவேயிருக்கிறது.

சுதந்திரத்தின் பெருமையை உணராத, அடிமைச்சிந்தனைகளால் தூழப்பட்ட இந்தக் கோடாரிக்காம்புத்தனங்களை தினசரி நம்மிடையே வளர்த்துக்கொள்வது எமது தாயகத்திற்கு நாம் புரியும் துரோகத்தனமேயென்பதை வெளிநாடுகளில் வாழும் ஒவ்வொரு தமிழருக்கும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இனியவர்களே...!

எழுச்சிதரும் தமிழின வரலாற்றின் திருப்புமுனையானஇக் காலகட்டத்திலாவது உங்களது அடிமை உணர்வுகளை அகற்றி; சுதந்திரத்தை நோக்கிய உங்களது தூய ஆதரவை இனி - தயங்காது தமிழீழ விடுதலைப்புலிகளுக்காக்குங்களென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.


தாயகம் ஆசிரியர் குழு.

**பொங்கட்டும் விடுதலை உணர்ச்சி! மலரட்டும் தங்கமாமணித் தமிழீழம்!!**

படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை:



பளீர் என்று கன்னத்தில் இறங்கிய அறையால் காந்திக்கிழவர் அதிர்ந்துபோனார்.

ஒருகணம் மின்னலும் நட்சத்திரமும் மோதி மறைந்ததைப்போலிருந்தது.

"அவன் எங்கை இருக்கிறானென்டு எனக்குத் தெரியாது!" வேதனையினூடே கிழவரின்குரல் ஈனஸ்வரமாக ஒலித்தது.

"பொய்சொல்லாதே..! கிழவா நீ தப்பமுடியாது..!" பின்னால் நின்ற சிப்பாய் தென்னம்மட்டையால் கிழவனுக்கு வளமாக முதுகில் ஒன்று வைத்தான். பலத்தஅடி கிழவன் பதைபதைத்து வேலியோரமாக விழுந்துவிட்டார்.

கிழவனிடம் மூச்சுப்பேச்சு எதுவுமில்லை.

இந்தியக் கூலிகளின் முகத்தில் அமைதியை ஏற்படுத்திவிட்ட ஒருவிதத் திருப்தி.! தமது அமைதிப்பணிக்காக அடுத்தவீட்டினுள் நுழைகின்றனர்.

எவ்வளவுநேரம் அப்படியே கிடந்தாரென்பது கிழவருக்குத் தெரியாது. கண்விழித்தபோது செங்கமலம் காற்றுவீசிக்கொண்டிருந்தாள்.

கன்னத்தில ஐந்து ஆக்கிரமிப் புவிரல்களின் அடையாளம் அப்படியே சிவப்பாக...

முதுகில் மாட்டுக்குக் குறிவைத்ததைப்போல் வெடித்திருந்த தோல்ப்பகுதி இந்திய மட்டையடிக்காக இரத்தக்கண்ணீர் வடித்தது.



படிப்பகம்



பழுத்ததேகம்..கறுப்புவெள்ளை கலந்தமுடி..முன்பு யாழ்ப்பாணக் கச்சேரிமுன் நடந்தசத்யாக்கிரகத்தின்போது வாங்கிய அடிக்குப்பிறகு கிழவனின் தேகம் இப்பொழுதுதான் பலத்த நேரடித்தாக்குதல்களை சந்தித்திருக்கிறது.

அந்தநேரம் தேகத்தில் வலுவிருந்தது. இப்பொழுது அவரது வயது சுடலைக்குக் கூப்பிடுதூரம்வரை வந்துவிட்டதால் தேகமெல்லாம் "சுள்..சுள்"ளென்று வலியெடுத்தது.

பழைய தலைமுறையினருக்கு அவர் சுந்தரலிங்கம் போஸ்ட்மாஸ்டரென்றே அறிமுகமாகியிருந்தார். இப்பொழுதெல்லாம் அவரை இளவட்டங்கள் காணும்போது காந்திஅப்பாஎன்றும் - காணாதவிடத்து காந்திக் கிழவரென்றும் குறிப்பிடுவதைக்காணலாம்.

இளமைக்காலத்தில் கிழவர் காந்தியின் கொள்கையால் பெரிதும் வசீகரப்படுத்தப்பட்டிருந்தார். உப்புச்சத்தியாக்கிரககாலத்திலிருந்தே அஹிம்சை, சத்தியாக்கிரகமென்றால் அவருக்கு தேகத்தில் இனம்புரியாதஒருநடுக்கமெடுக்கும். காந்தீயம் என்பது அவருள்ளத்தில் ஒரு வெறியாகவோ அல்லது பக்தியாகவோ குடிகொண்டிருந்தது.

வித்துவான் வைத்திலிங்கம்மாஸ்டரும் கிழவரும் ஆத்மார்த்தநண்பர்கள். இந்திய சுதந்திரகாலத்தின்போது இவர்களிருவரும் ஈழத்து வீதிகளில் "வந்தேமாதரமென" முழங்கித்திரிந்தவர்கள்

இவரைத் தனியேவிட்டுவிட்டு வித்துவான் வைத்திலிங்கம் போனவருடமே டிக்கட் எடுத்துவிட்டார்.

கிழவன் வலியினூடேயும் வைத்திலிங்கத்தை ஒருகணம் நினைத்துப்பார்த்துக்கொண்டார். ஒருகணம் அந்தநாள் ஞாபகம்நெஞ்சிலே..

"பிள்ளை கொண்ணன் தப்பியிட்டானே?" அவரின் குரலில் உடைவு.

"ஓமப்பு.. அவரைப்பிடிக்கஏலஇல்லை ..என்டஆத்திரத்திலே சீனிக்குட்டியரைச் சுட்டுப்போட்டுப்போயிட்டாங்களாம்..!"

"மருதடியானே அவன் கண் தெரியாதவனெல்லோ? கொள்ளையிலை போவாங்கள்.!" திட்டிக்கொண்டே எழும்ப முயன்றவரை பேத்தி செங்கமலம் மறுபடியும் படுக்கையில் சரிக்கிறாள். அவருடையபேரன் சாந்தன் தப்பிவிட்டானென்ற செய்தி கிழவருக்கு வேதனைக்குமத்தியிலும் ஒரு சொட்டுக் குளிர்ஜலமாயிருந்தது.

ஒவ்வொரு அக்டோபர் இரண்டாம் திகதியும கிழவர் இந்திய சுதந்திரக்கொடியை வீட்டில் ஏற்றிவிடுவார்.

காந்திக்குல்லா, கதராடையென அயல்நாட்டு அரசியல் அவரை அமர்க்களப்படுத்திவிடும்.

"அறப்போர் தொடுப்போம்"

"தூக்குமேடை பஞ்சுமெத்தை..!"

"துப்பாக்கிக் குண்டு விளையாட்டுப்பந்து..!"

என்று தமிழரசுக்கட்சியின் அந்தநாளைய அஹிம்சைப்போராட்டங்களை அவரும் அவரது நண்பர்களும் மலரும் நினைவுகளாக மாலையில் கூடும்போது நுகர்வதுண்டு.

-இது ஈழத்துக் காந்திகதை-

எழுபத்தேழில் கூட்டணி தனது தேர்தல் முடிவுகளை உலகநாடுகளே எதிர்பார்த்திருப்பதாகக் கூறியபோது, அவர்களுக்காக வோட்டுப்பொறுக்குவதற்காக, அவரும் வித்துவான் வைத்திலிங்கமும் ஊரில் பட்டபாடுகள் எழுத்துக்களால் எல்லைப்படுத்தமுடியாதவை.

அஹிம்சைப் போராட்டத்திற்கு ஆப்புவைத்துவிட்டு, இளைஞர்களுடைய துப்பாக்கிவேட்டுக்கள் அங்கொன்றும், இங்கொன்றுமாக ஒலிக்கத்தொடங்கியபோது கிழவர் அவற்றையெல்லாம் அவ்வளவாக ரசிக்கவில்லை.

சாந்தனும், செங்கமலமும் தாய் தகப்பனைப் பறிகொடுத்து இரண்டாண்டுகளாகிவிட்டது. வடமராட்சித்தாக்குதல் அவர்களுக்கு அதை அந்தஸ்தைவழங்கியிருந்தது. அதன்பின் கிழவரின் பென்சனில்தான் அவர்களின்சீவியம்.

இலங்கைஅரசு முப்பத்தையாயிரம் நஷ்டஈடுதருவதாகக்கூறி இப்பொழுது முழங்கையை நீட்டிவிட்டது.

தாய்தகப்பனை இழந்தபிறகு சாந்தன் பேரனோடு அடிக்கடி தர்க்கித்துக்கொள்வான் ஆனால் அன்புகுறைவதில்லை.

ஆயுதப்போராட்டத்தின் அவசியத்தைஅவன் கிழவர்முன் அடிக்

கடிவலியுறுத்துவான். அந்தநேரங்
களிலெல்லாம் அவர் சத்திய -
சோதனையைப்பற்றி ஒரு குட்டி
ப்பிரசங்கமே வைத்துவிடுவார்.

ஆனால் காலஓட்டத்தில் சா
ந்தன் விடுதலைப்புலிகளோடுதன்
னையும் இணைத்துக்கொண்டபோது
அந்தச் சமுதாயவேகத்தில் கிழ
வரின் சத்தியசோதனை எடுபட
வில்லை.

அவருள்ளத்தில் பேரன்மீது ஒரு
பாசக்கசிவு.! அவனுயிருக்காக-
அவர் அடிக்கடிபிரார்த்தனையிலீ-
டுபடுவார்.

இந்தியப்படை அமைதிப்படை
யென்றபெயரில் ஈழத்தில்அடியெ
டுத்துவைத்தபோது கிழவர் ஆன
ந்தக்கூத்தாடினர். காந்தியேவந்
திறங்கிவிட்டதாக ஒரு பிரமை!

திடீர்த்திருப்பம்-





புலிகளுக்கும், பாரதத்திற்கும் ஒரு யுத்தமா? கிழவரின் உணர்வுகள் மறுபடியும் உருத்திரதாண்டவத்திற்குள் பிரவேசித்தது.

[illegible] நாட்செல்லச்செல்ல, அவர்உள்ளத்தில் சில கேள்விகள்.

"அமைதிப்படையாக இருந்தால் ஏன் கற்பழிக்கிறார்கள்? இது காந்தீயத்திற்குப் பொருந்துமா?"

"நல்லூர்கந்தசாமி கோவிலில் மலசலம் கழிக்கக்கூட அனுமதி மறுக்கப்பட்டநிலையில் பட்டதுன்பங்கள்..வாந்திபேதிஅழிவுகள்..இதுவாகாந்தீயம்.?"

திலீபனின் மரணம் கிழவனின் மனதில் ஏற்பட்ட முதல் உடைவு.

வெப்பத்தினால் பனிமலைக் கட்டுக்களினூடே உடைந்துவிழுவதைப்போல இந்திய மாயைகள் கிழவனின் மனதில் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக துண்டுகளாக..துகள்களாக, உடைந்து..உடைந்து..கரைந்துகொண்டிருந்தது.

இப்பொழுதெல்லாம் அவர் மனதில் ஒருவித வன்மம் இந்தியாவிற்கு வக்காலத்துவாங்கும் உணர்வுகள் வங்குரோத்து நிலையை அடைந்துவிட்டன.

தமிழீழ விடுதலைப்புலிகளைக் கண்டால் அவர்களுடன் தானும் இணையவேண்டுமென்றதுடிப்பு அதனாலாகத்தான் பேரன் சாந்தனை கூப்பிட்டிருந்தார்.

வன்னிப்பகுதியிலிருந்ததால் ஒரு மாதத்திற்குப்பிறகே அவன்வந்திருந்தான் அதைக்கூட யாரோ ஒரு தங்கத்தமிழன் இந்தியனின் காதுகளில் போட்டுவிட்டான்.

நல்லவேளையாக சாந்தன் தப்பிவிட்டான்.

"பிள்ளை பசியாக்கிடக்குதணை.! "

அன்றைய அமர்க்களத்தில்செங்கமலம் அடுப்பே மூட்டவில்லை அதற்குப்பிறகுதான் கிழவருக்குப் பிடித்த தட்டுரொட்டியும் இடிசம்பலும் வேகமாகத் தயார்செய்துமுடித்தாள்.

ரொட்டியைச் சாப்பிட்டகையோடு செங்கமலம் கொடுத்த சுடுதண்ணீர் ஒத்தடத்துடன் கிழவர் ஆழமாக உறங்கிவிட்டார்.

செங்கமலத்திற்கு மனதிற்குள் இடைக்கிடை பல்லிகொட்டத் தொடங்கியது. அப்புவுக்கு ஏதும் வந்துவிட்டால்...பிறகு...?

அவள் தூங்காமலே அவருக்கு அருகில் சரிந்திருந்தாள். கிழவர் அடிக்கடி ஏதோ புசத்தியவண்ணமிருந்தார். ஆனால் வசனங்களில் தொடர்பிருக்கவில்லை.

சீறுவெடி வெடித்ததைப்போல துப்பாக்கி வேட்டுக்களின் சத்தத்தில் கண் விழித்தபோது, தான் கடைசியில் தானும் உறங்கிப்போய்விட்டதை செங்கமலம் உணர்ந்துகொண்டாள்.

பொழுது பொல பொலவென விடிந்திருந்தது.

அவர்களுடைய வீட்டுக்குச் சுமார் முந்நூறு மீட்டர் தொலைவில் ஒரு இந்தியப்படைமுகாமிருக்கிறது. இது ஒருவேளை விடுதலைப்புலிகளின் காலைநேரப் பூபாளமாக இருக்கலாமோவென நினைத்துக்கொண்டு வேட்டுப்பக்கமாகப் பார்த்தாள்..

காயப்பட்டவர்களைத் தூக்கிக்கொண்டு சனங்கள் வீதிவழியாக ஓடுவது தெரிந்தது. சந்தேகமில்லை இது இந்திய ஆக்கிரமிப்புத்தான்.

"அப்பு எழும்பணை..!"

செங்கமலம் திடுக்கிட்டாள்.

"அப்பு..!அப்பு..!!"

கிழவரைப் படுக்கையில் காணவில்லை..!

அவள் வேகமாக கொல்லைப்புறமாக ஓடினாள், அங்கே கிழவர் கோவணத்தை இழுத்துக்கட்டியபடியே வந்துகொண்டிருந்தார்.

"அப்பு வாருங்களணை நாங்கள் உந்தப்பக்கமாக ஓடுவம் வாணை..!" செங்கமலம் பரபரத்தாள்.

"நீ உந்தப்பக்கமாகப் போ பிள்ளை நான்பிறகாலை வாறன்!"

அவள் காவோலை வேலியைத்தாண்டி அடுத்தகாணிக்குள் வேகமெடுத்துப்பாய்கிறாள்.

கிழவர் வாசற்பக்கமாக ஒரு நோட்டம்விட்டார், சொல்லிவைத்தாற்போல வேலிக்குமேலால் [illegible]வாக நான்கு சீக்கியத்தலைகள் நீண்டிருந்தன...

ஒருவன் செங்கமலத்தைக்காட்டி ஏதோ ஹிந்தியில் கத்தினன்.

இன்னொருவனின் நாக்கு ஓநாய்போல நீண்டிருந்தது. அந்தநாலவருக்கும் கிழவருடன் மினைக்கெட நேரமிருக்கவில்லை.

—கண் இமைக்கும் நேரம்.—

கிழவர் கையிலிருந்த கிரனைட்டை கடித்து வேலிப்பக்கமாக எறிகிறார். பலத்தசத்தம் நான்கு தலைகளும் துண்டுகளாக..துகள்களாக....வேலிசரிந்திருந்தது. சுற்றிவர ஒரே இரத்தக்காடு.

ஓடிய செங்கமலம் திகைத்துப்போய் நின்றாள்.

அப்புவுக்கு கைக்குண்டுகளைக் கொடுத்துதவியது யார்? சாந்தனா? அவளுக்கு விபரம்தெரியவில்லை. கிழவர் வீட்டிற்குள் ஓடிப்போய் இத்தனைநாளும் மதிப்பும், மரியாதையும், கொடுத்துவைத்திருந்த இந்தியக்கொடியைக் கழற்றித் தெருவில் வீசுகிறார்..

பக்குவமாக மற்றக்குண்டுகளையும் கையிலெடுத்தபடி துப்பாக்கிவேட்டுக்கள் வரும் திக்கைநோக்கி பலத்த சிரிப்பொலியுடன் வேகமாக ஓடத்தொடங்குகிறார்.

செங்கமலம் இப்பொழுதுபின் வாங்கி ஓடவில்லை..!

அவளும் நிதானமாக தாத்தாவின் திக்கைநோக்கி உறுதியாக நடக்கத்தொடங்குகிறாள்.

---

## விகடன் கூறுகிறது.




### மூன்று உண்மைகள்!

இலங்கை அரசுக்கும் எல்.டி.டி.ஈ. இயக்கத்துக்கும் இடையே நேரடியான பேச்சுவார்த்தை தொடங்கியிருக்கிறது. இது வெற்றி பெறுமா என்பது கேள்விக்குறியாக இருக்கலாம். ஆனால், மூன்று உண்மைகள் தெளிவாகின்றன.

ஈழப் பிரச்னையில் 'மத்தியஸ்தம்' செய்யும் பங்கை வகிக்கச் சென்றது இந்தியா. ஆனால், இப்போது 'இந்த மத்தியஸ்தரே வேண்டாம்' என்று தள்ளிவிட்டு, சண்டை போட்டவர்களே நேரடியாகப் பேசிக் கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள்! நமது 'மத்தியஸ்த ராஜதந்திரம்' படுதோல்வி அடைந்ததைத்தான் இந்த நிலைமை நிரூபித்திருக்கிறது.

அடுத்து, எல்.டி.டி.ஈ. மக்கள் ஆதரவை இழந்து பலவீனமான இயக்கமாகிவிட்டது என்று இந்திய அரசு செய்த பிரசாரம் பொய் என்றும் ஆகிவிட்டது! பலவீனமாயிருந்தால், சிங்கள ஆதரவாளர் என்று வர்ணிக்கப்பட்ட ஜனாதிபதி பிரேமதாசா தலைமையில் இயங்கும் இலங்கை அரசு, விடுதலைப்புலிகளை நோக்கிச் சமாதானத்துக்குக் கை நீட்டுமா?

மூன்றாவதாக, 'மக்கள் ஆதரவோடு தேர்தலில் ஜெயித்து ஆட்சி அமைத்ததாக' இந்திய அரசு செய்தி ஸ்தாபனங்களால் துதி பாடப்பட்ட வரதராஜப்பெருமாளின் தமிழ் மாகாண அரசு பேச்சுவார்த்தையில் காணாமல் போய்விட்டது! ஏனென்றால், மக்கள் ஆதரவு இல்லாமல் இந்திய சமாதானப் படையின் தயவால் கால் ஊன்றிய ஆட்சி அது! அதனாலேயே இப்போது அதன் சாயம் வெளுத்துவிட்டது!



## நிகடு

— மேகிநன் —

மாகாணசபையே.!
சுதந்திரமெனும்
கற்பூரவாசனை
தெரியாஉனக்கு,
ஒரு உருவம்தேடினேன்
இந்தியப்படையை
ஈழத்தில்
இருக்கவேண்டும்.
உனது
காம்போதியையுட்
அவ்வுருவில் இணைத்தேன்
கிடைத்தது
உனது நிஜஉரு..!



கட்டுரை



# இலங்கைத் தமிழரிடையே சண்டையும் சச்சரவும்...!

## (2)

சென்ற இதழ் தொடர்ச்சி

16 ம் நூ ற்ருண்டு போத்துக்கீசர் இங்கே வரும்வரை சிங்கள வரும், தமிழரும் தங்களுக்குள் அடிக்கடி சண்டை போட்டுக்கொ ண்டிருந்தனர். போத்துக்கீசர் கத்தோலிக்கமதத்தையும, அதன்பி ன்பு வந்த டச்சுக்காரர் (ஒல்லாந்தர்) வர்த்தகத்தையும்தம து காலத்தில் இங்குகொண்டுவந்தனர். ஆங்கிலேயர் 1795ல்இல ங்கைவகு வந்தனர். இவர்களே இந்தநாட்டை ஒன்றுபடுத்திநல் ல கல்விமுறையையும் கொண்டுவந்தனர். இந்த நாட்டின் தேயி- லை, இறப்பர், தென்னைத் தோட்டங்களால் நாடு செழுமையா கமாறியது.

ஆங்கிலேயர் தமிழருக்கு ஆதரவும், சலுகையும் காட்டுகிருர் களென்றும், பிரித்தாழுகின்ருர்களென்றும் சிங்களவர்கள் குற்றம்- சாட்டினர்கள். எப்படியிருந்தாலும், உண்மையாக தமிழர்க்ள் தங் களுக்குத் தரப்பட்ட கல்விபயிலும் சந்தர்ப்பத்தை நன்கு பயன் படுத்திக்கொண்டனர். ஆங்கிலத்தை தமது மொழிபோலப்பாவி த்து, நலலநிலையடைந்தனர். ஜனத்தொகையில் 18 வீதமாகஇரு ந்தபோதும், நிருவாக சேவையில் நன்கு பயிலப்பெற்று சிங்கள வரைவிட உத்தியோக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவு

ஆங்கிலமூலம் நிடுஜோக்கர்
தமிழில் எஸ்.ஏ.பிரகாஷ்

ம் உயர்நிலையில் வாழ்ந்தனர். இலங்கையில் சுதந்திரஇயக்கம்-இல்லாதபோதும், இந்தியாவிற்கு சுதந்தரம்போராட்டமிருந்த-மையால் அதன் பின்னணியில் இந்த நாட்டிற்கும் சுதந்திரம்கிடைத்தது. 1948 மாசி 04 இலங்கையின் சுதந்திர தினமாகும்.

அந்த நேரத்தில் இலங்கையிலிருந்த சிங்களவரும் தமிழரும் தாம் இரு இனமெனக் கருதவில்லை, இலங்கையரென்றேகருதினர்கள். ஒன்றாகவே நாட்டையாண்டார்கள். ஒன்றாகவே கல்லூரிகளில் படித்து, விளையாட்டுத்துறைகளிலீடுபட்டு, பின் சர்வகலாசாலைகளிலும் ஒன்றாகவே படித்து, அதன்பின்பு நகரிலுள்ள ஆடம்பரமான கழகங்களில் அங்கத்தவராக இருந்து தங்களை முற்றிலும் இலங்கையராகவே கருதியும்வந்தனர்.

1956ல் ஒரு சிங்களப் பிரபு எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்கா தலைமையில் ஆட்சிமாறியது. இவரது கட்சிக்கு புத்தபிக்குகளும், அறிவுமிகுந்தவர்களும், குடியானவர்களும், கிராமத்தவரும், வேலையில்லாத இளைஞர்களும் ஆதரவு கொடுத்தனர் இந்த நாட்டிலே தமிழர்கள் கிட்டத்தட்ட 30 இலட்சம்தானிருந்தபோதும், அங்கிருந்து சுமார் 30மைல் தூரத்திலே, தமிழ்நாட்டில் ஐந்தரைக்கோடி தமிழர்களிருந்தனர். ஆட்சிக்கு வந்து முதல்காரியமாக சிங்களமொழியை ஆங்கிலத்திற்குப் பதிலாக அரசகரும மொழியாக ஆக்கினர். இதன்பிரகாரம் அரசாங்கம் தனது மொழித் தேசியத்தை வெற்றிகரமாக முடித்தது. இந்தியாவின் தென்பகுதி, தமிழ் நாட்டில் பேசப்படும் திராவிடமொழியான தமிழைப் பேசும் இலங்கைத் தமிழர்கள் ஐயமும், அச்சமும்கொண்டனர். அந்த நாட்டின் பாராளுமன்றத்தில் ஒரு சமயத்தில் அங்கம் வகித்த "ஹார்வார்டில்" படித்த தமிழர் - அச்சமயம் தீர்விலிருந்து பிரச்சனைக்குச் சென்றோம்" என்று - சொன்னார்.

இதன்பின்பு, படிப்படியாக பல பிரச்சனைகள் உருவாகி பயங்கரமடைந்தது. 1971 ல் சர்வகலாசாலை நுழைமுகப்பரீட்சையில், தமிழர்கள் சிங்களமாணவர்களைவிட அதிகமான புள்ளிகளைப் பெறவேண்டுமென்ற சட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்தது. அரசாங்கமும் பல பெரிய வியாபார ஸ்தாபனங்களும் சிங்களத்தையே கரும மொழியாக வைத்திருந்ததாலும், அரச உத்தியோகங்களுக்கு சிங்களவருடன்-



www.padippakam.com

போட்டிபோட வேண்டியிருந்ததாலும், ஏற்கெனவே அங்கமிழந்தவர்கள் போலஇருந்த தமிழர்களை சிங்கள அரசியல் வாதிகள் மிகவும் பாதிப்படையச் செய்தார்கள். 1956 இலிருந்து 1980 வரை, அரசாங்க உத்தியோகத்தில் 50சத வீதத்திலிருந்து 11 வீதமாக தமிழர்களுடைய தொகை வீழ்ச்சியடைந்தது. 1956ல் இருந்து மொழிக் கலவரம் கொழும்பிலும் நாட்டின் பல்வேறு-பகுதிகளிலும் இடைவிட்டு நடந்துகொண்டிருந்தது. தமிழர்கள் வாழும் பகுதிகளிலிருந்து, காலம் செல்லச் செல்ல "சுயமானஆட்சி உரிமை", "தன்னாட்சி" என்னும் குரல் நாளடைவில் கேட்கக்கூடியதாக இருந்தது.

1972 ல் 17 வயது நிரம்பிய வேலுப்பிள்ளை பிரபாகரன் என்பவரின் தலைமையில் 30 இளம்வாலிபர்கள் "தமிழீழவிடுதலைப் புலிகள் என்னும் கெரில்லா இயக்கத்தைத் தாபித்தார்கள். அவர்கள், "இனிமேலும் எமது அரசியல்வாதிகள் எங்களுடைய (தமிழர்கள்) உரிமைகளைப் பாதுகாப்பவர்களல்ல!" என்று அறிக்கைமூலம் பிரகடனப் படுத்தினர். 1977ல் அமெரிக்க-கொள்கை சார்ந்த ஜூனியஸ், ரிச்சட் ஜெயவர்தன என்பவர் அரசாங்கம் அமைத்தபோது, தனியாட்சிஎன்றகுரல் மேலும் வலுவடைந்தது. மேலும் ஜயவர்தனவின் அமோக வெற்றி, தமிழர்களுக்குஒரு நம்பிக்கையைத் தந்தது. ஏனென்றால், இவர் முந்திய சிங்களஅரசியல் தலைவர்களைவிட-குறிப்பாக பண்டாரநாயக்கா (இவர் - 1959ல் படுகொலை செய்யப்பட்டு, அதன்பின் இவரின் விதவை மனைவி அடுத்த ஆண்டில் ஆட்சிக்குவந்தார்.) போன்றவர்களைவிட மிதவாதியாகவும், நிதானமுடையவராகவும் கணிக்கப்பட்டார். மேலும், முதன்முறையாக ஒரு தமிழர் அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக வந்தார். ஆகையால், இனங்களுக்கிடையிலான குறைபாடுகள் கவனிக்கப்படுமெனக் கருதப்பட்டது ஆனால்.......



(தொடரும்)

---

இனி உங்கள் ஆக்கங்கள் வரவேண்டிய முகவரி;

THAYAKAM,
P. O. BOX: 133,
7400 HERNING.

www.padippakam.com


இலக்கியம்:



# வீரமகன்

எஸ்.ரீ. அருண்.

மீன்உண் கொக்கின் தூவி அன்ன
வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே, கண்ணீர்
நோன்கழை துயல்வரும் வெதிரத்து
வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே."

(புறநானூறு, பாடல், 277)
பூங்கண் உத்திரையார்.

வால்நரை; வெண்மையாக நரைத்த. நோன்கழை; வலியமுங்கில் துயல்; அசையும். வெதிரம், மூங்கில்மலை. தூங்கிய சிதர்; தேங்கிய மழைத்துளி.

பொருள், மார்பிலே வேலேந்தி போர்க்களத்திலே என்மகன்-மாண்டான் என்ற செய்திகேட்டு, மனம்வருந்துகிறேன். ஆயினும்அவன்இந்த மண்ணை மீட்கச்சென்று போராடி இறந்ததால் மகிழ்கிறேன்.! என்று ஒரு வயோதிபத்தாய் பாடுவதாக இப்பாடல்-உள்ளது. கொக்கினது சிறகுபோல நரைவிழுந்துவிட்ட என் கூந்தல் தடவி உனது பொக்கைவாயைத்திறந்து வாழ்த்தம்மா எனக்கேட்ட அந்த வடிவழகன் பொங்கும் கடல்போல ஆர்ப்பரிந்து போர்க்களம் போய்ச்சேர்ந்தான். அவன் வீரமரணமடைந்தா-னென்ற செய்திகேட்டு, மூங்கிலில் தேங்கிநிற்கும் மழைநீர்போல நிற்கும் இக் கண்ணீரானது எனது சோகக் கண்ணீரல்ல ஆனந்தக் கண்ணீரே.! என்று அறிந்துகொள்ளுங்கள் என்று அந்தப்பாடல்வருகிறது.

இன்று களத்தில் போராடி வீரமரணமடையும் தமிழீழவிடுதலைப்புலிகளின்வீரமும் மேற்கண்ட உயர்நிலைப் புறநானூற்றுப் பாடல்களுக்கு எந்தவகையிலும் குறைந்ததல்ல. புலிகள் எழுதும்-புதிய புறநானூற்றுக்காலத்தில் நாமும் வாழ்கிறோமேயென்று-ஒவ்வொரு தமிழனும் பெருமைப்படவேண்டும்.

ரூபா 750/= இரண்டாம் பரிசுக்கதை



# உன்னடத்தில் தண் அடிகளும்

சோளகக்காற்று செம்பாட்டு மண்ணை அள்ள எறிவது கண்ணாடியினூடே தெளிவாகவே தெரிந்தது.

இதுவரை தென்மேல்பருவப் பெயர்ச்சிக்காற்றும் உடைப்பெடுத்திருக்கவேண்டுமென அவன் அனுமானித்துக்கொள்கிறன்.

கடலை, கச்சான் கோபுரங்களும் பால்றின் வெற்றுப்பேணிகளும் முருகண்டி வந்துவிட்டதற்கு முத்தாரம் வைத்தன.

நினைவுக்கதிர்கள் எட்டாண்டுகளுக்கு முந்திய ஒரு ஒளிப்படத்தை "களுக்"கென்று கொம்பியூற்றரைப்போல விரைவாகக்கொண்டுவந்து கண்முன் போட்டது.

அதிலும் கடலை, கச்சான், தேங்காய்த்துண்டுகள்..பால்றின் பேணிகள்...சந்தேகமேயில்லை முருகண்டியேதான்.! அவனும்மற்றவர்களுடன் பஸ்சிலிருந்து கீழே இறங்குகிறன்.

பரீசையும், முருகண்டியையும் ஒப்பிடுவதென்னவோ மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுவதைப் போலிருந்தாலும் அவனுக்கென்னவோ முருகண்டியில் ஒரு விட்டாத்தியிருப்பதைப்போலிருந்தது.

தேகத்திலும் ஒரு சுளுவான சுவாசம்.!

எட்டாண்டுகளுக்குப் பிறகு அவனது அருமையான தங்கை - சுமதியையும், தாய்தந்தையை இழந்தபிறகு ஆலமரமாய் நிழல்தந்த பாலா அங்கிளையும் குடும்பத்தினரையும் ஒன்றாகப்பார்க்கப்போகிறேமே என்ற ஆவல் மனதில் கடுகதியாயிருந்தது.

*******************************************

பீ.ம. மதனரூபன்
பிரான்ஸ்

www.padippakam.com




# தியாக வேங்கை திலீபன் நினைவுச் சிறுகதைப் போட்டி

மதன் பரீசிற்குப் புறப்பட்டபோது இரட்டைப் பின்னல், பள்ளைப்புள்ளியாக பூப்போட்ட சீத்தைத்துணிப் பாவாடைசட்டையுடன் கைகளைஅசைத்து வழியனுப்பிய அந்தக் கடைசிக்காட்சி- இப்பொழுதும் பசுமையாக அப்படியேயிருந்தது.

அன்று அவளும் வழியனுப்புவதற்காக முருகண்டிவரை வந்திருந்தாள்.

கடைசியாக இரண்டாண்டுகளுக்கு முன் அவள் க.பொ.த- சாதாரணம் சித்தியடைந்தபோது அனுப்பிய ஒருபடம் கடிதத்துடன் பரீசிற்கு வந்திருந்தது. அதுதான் அவனுக்குத்தெரிந்த அவளுடைய கடைசி உருவம். அவளுக்குப் பக்கத்தில் நின்ற பாலாஅங்கிளின் தலையிலும் காலம் வெள்ளையடித்திருந்தது.

தாயக மண்ணைப்பார்க்கவேண்டுமே என்ற ஆவலும், தமிழீழத்தில் முறுக்கேறிய ஈழவிடுதலைப்போராட்டமும் பரீசைவிட்டுப்புறப்படு என்று அவனை அவ்வப்போது உந்தியதா அல்லது - உதைத்ததா? என்பது ஒரு கேள்வி? பதில் உதைத்ததென்றுதான் சொல்லவேண்டும்.

அதிகமாக படுக்கையில் புரளும்போது மனதில் ஒரு ஒப்பீட்டாராட்சி-

"வாழ்க்கை அது எத்தனை மகத்தானது.! எத்தனைஎதிர்பார்ப்புக்கள், எண்ணங்கள் அதற்கொரு எல்லைபோடமுடியுமா? மரியானாஅகழியைவிட அதன் ஆழம் பலஆயிரம்மடங்கு..!" மதன் இப்படி வாழ்க்கையைப்பற்றி எண்ணுவதுண்டு. அதேவேளை துப்பாக்கிக் குண்டுகளுக்கும், சைனைட் குப்பிகளுக்கும் அந்த உயர்ந்

த வாழ்க்கையையே தானமாக்கி சுதந்திரத்திற்காகப்பறக்கும் விடுதலைப்புலிகளின் தியாக மரணங்களையும் அதனுடன் ஒப்பிடும் போது, அளவுகோலுக்குள் அடக்கமுடியாத அவர்களுடைய தியாகமரணங்கள் பரீஸ் கோபுரம்போல உயர்ந்து அவனை அந்த-நேரங்களிலெல்லாம் மிகச்சிறியவனாக்கிவிடும்.

அவன் உள்ளத்திலும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்காக மணிக்கூட்டின் பெண்டுலம் போல மணிக்குமணி அதிர்வுகள் கேட்டவண்ணமேயிருந்தது.

அதனால்தான் கடந்த மூன்றாண்டுகளாக பனி, மழையென்றுபாராது, விடுதலைப்புலிகளுக்காக நிதிசேர்க்கமுற்பட்டு பரீசில் -



அவன் பட்டபாடுகள் பழமைக்கவிதைகள் போல கடுமையான-யாப்புக்களுடன் மனதில் இறுகியிருந்தது.

சிலர் பத்தப்பிராங்குக்காக பலதடவைகள் அலைக்கழிப்-பார்கள்...

லிப்ட் வசதியில்லாத சில மாடிவீடுகளில் ஏறி..ஏறி..காலருந்துவிடும், அதுவும் ஒருவிதப்போராட்டம்தான்.

பரீசில் தமிழக சினிமா நடிகர்கள் அல்லது பாடகர்கள்-வந்துவிட்டால் அவர்களின் முகதரிசனத்திற்காக பனி,குளிரென்று எதையும்பாராத முன்னணியில் படையெடுக்கும் அதேபத்தப்பிரா-ங் அலைக்கழிப்புக்களை பல்லிளித்தபடி பார்க்கும்போது; நமது இனத்தின் ஈனத்தனம் அவனை சுடுமணலில் புரட்டியெடுக்கும். அதிலும் கவர்ச்சி நடிகைகளைக் கண்டுவிட்டால் சில பிரகஸ்பதிகள் கடிகாரங்களையும, மோதிரங்களையம் கழற்றிவீசுவது இருக்கிறதே அதைசொல்வதானால்...வேண்டாம் போங்கள்..!

நினைவுகளை முறித்து குறுக்காக பிள்ளையார் பஸ்பேரிரைச்சலெடுத்தது.

யாரோஒருவர் "சடார்"ரென தேங்காயை எறிந்துடைந்து விட்டு ஓட்டமாக வந்து பஸ்சில் குந்திக்கொண்டார். பஸ்புறப்படமுன் மற்றும் தனது இருக்கையை நிரப்பிக்கொள்கிறான்.

அவன்முதல் முதல் இந்தப்பூலோகத்தின் வெளிச்சத்தைப்பார்த்தது கிளிநொச்சி ஆஸ்பத்திரியில்தான். அவனைக்காப்பாற்றிய வைத்தியர்கள் பிரசவத்தின்போது அவனது தாயைக்காப்பாற்றும்பொறுப்பை ஆண்டவனிடம்கொடுத்துவிட்டார்கள்.

ஆண்டவன் அப்போது கிளிநொச்சியிலில்லை- அவள்போய்விட்டாள்.

இப்பொழுதுபஸ் கிளிநொச்சியை நெருங்கிக்கொண்டிருந்த-தால் தான் பிறந்த மண்ணை நெருங்க,நெருங்க அவனுள் ஒரு விரைவு. பஸ் விரைவாக ஓடுகிறதா? அல்லது மனம் விரைவாக ஓடுகிறதா? புரியவில்லை.

பிரான்ஸ் ரீ.வீயில் அவன் அடிக்கடி உதைபந்தாட்டம் பார்ப்பதுண்டு. அச்சந்தர்ப்பங்களில் பிரான்ஸ் கோல் போட்டால் சலிப்பின்றி ரீ பிளேயில் திரும்ப, திரும்ப சிலோமோஷனில்காட்டுவார்கள்.

அதுபோல வவுனியா தாண்டியதும் முதல்வந்த செக்கிங்கில் நடந்த ஒரு சம்பவம் அவன் நினைவில் மீண்டும் மீண்டும் சிலோமோஷனில் வந்துகொண்டிருந்தது.

அவன் சுமதிக்காக ஆசையுடன் வாங்கிவந்த கைக்கடிகாரத்தை ஒரு இந்தியக்கூலி "லபக்"கென்று எடுத்து தலைத்தொப்பிக்குள் வைத்து மூடிக்கொண்டான். அது மறுபடியும் ஒருமுறை சுலோமோஷனில்....பிரான்ஸ் ரீ.வீதோற்றது போங்கள்.!

இவர்களுக்கெல்லாம் ஒரு தொப்பி, மீசை காக்கிச்சட்டை உலசென்ஸ் திருடர்கள்.! மனதில் கறுவிக்கொண்டான்.

சரிந்து, விழுந்து...விழுந்து..ஓடி பஸ் ஒருவாறு கிளிநொச்சியைப் பிடித்துவிட்டது.

எட்டாண்டுகளுக்குமுன் கிளிநொச்சிநகர் தடைத்துவைத்தருத்துவிளக்காட்டம் "பளிச்" சென்றிருந்தது.

அவனுன் பேராச்சரியம்..!"கிளிநொச்சியா இது?"பழை-யசந்தைக்கட்டிடம இருந்தஇடத்தில் வெறும் குட்டிச்சுவர்களும் இடிபாடுகளும்தான்..ஏதோ புதைபொருள் ஆராட்சியில் அகழ்ந்தெடுத்த நகரம்போல சோபையிழந்திருந்தது.

தியாகவேங்கை லெப்டினன்ட் கேர்ணல் திலீபன் மைக்கைக் கையில் பிடித்தபடி பேசுவது போல ஒட்டப்பட்டிருந்த ஒரு சுவரொட்டிதான் அவன் கிளிநொசசியில் பார்த்த முதல் காட்சி.

இரண்டாவது நாள் உண்ணாவிரதத்தின்போது திலீபன் மக்களுக்காக ஆற்றிய உரையில.."அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய தமிழ் மக்களே.! நான் நாளை சுயநினைவுடன் இருப்பேனோ தெரி-

---

# புளொட் செய்தியன் புலம்புகிறார்..!

சிங்களஅரசும் புலிகளும் இணைந்து எம்மைத்தாக்கிவிட்டார்கள் ஆயினும் நமது சிங்கள தமிழ் முஸ்லீம் மக்களுக்கான முற்போக்கு போராட்டம் தொடரும்.

-புளொட்-



யாது.! ஏற்கெனவே அறுநூற்றைம்பதுபேர் எமது இலட்சியத்தி ற்காக வீரமரணமடைந்துவிட்டனர் அவர்களோடு வானத்திலிருந் து எனது இனத்தின் விடுதலையைப்பார்ப்பேன். எனது மக்கள்நிட் சயமாக தமிழீழம் மீட்பார்கள்..!" என்று கூறியிருந்தான்அதை ஒருதடவை நினைத்துப்பார்த்துக்கொண்டான்.

– அழகு.! –

திலீபனின் உண்ணாவிரதம் ஒவ்வொரு நாளையும் தாண்டத்தா ண்ட பிரான்சில் மதன் குட்டிபோட்ட பூனைமாதிரி அங்குமிங்கும் ஓடிஓடி, பெரும் அந்தரப்பட்டுக்கொண்டிருந்தான்.

திலீபன் தப்பிவிடுவானா? அவன்தப்பவேவேண்டும்.! என்பது– தான் அந்தநாட்களில் அவனது ஒரேஒரு எதிர்பார்ப்பு.

இந்தியத் தூதராலயத்திற்கு தொடர்ச்சியாக பதினொரு– நாட்களும் தினசரி தந்திகளை அனுக்காது அடித்தவண்ணமேயருந் தான்.

பன்னிரெண்டாம் நாள்....

அவன் தந்தியடிப்பதற்காக கந்தோர் போயிருந்தபோது இலங்கைநேரம் பகல் 10.58க்கு திலீபன் அமரனாகிவிட்டான்! என்ற செய்தி கிடைத்தது. அவன் அதன் பின் கொடிய இந்திய னுக்குத் தந்தியடிக்கவில்லை.

காந்திதேசம் தலைகுனிந்த அந்த நாளில்தான் எட்டாண்டு கள் பரீசில் தலைகுனிந்து வாழ்ந்த வாழ்வைத் தூக்கியெறிந்து விட்டு, தலைநிமிர்ந்தபடியே தமிழீழத்திற்கான தனது பயணத்தைத் தொடர முடிவுசெய்தான்.

பிரயாணம் நிக்கற்றென பலநாட்கள் இடித்துவிட்டது.! அத ற்குள்தான் தமிழீழத்தில் எத்தனைமாற்றங்கள், கோரங்கள்.!

கிளிநொச்சிக்கு கொழும்புபஸ் சரியாக எத்தனைமணிக்குவரு மென்பதற்கு அங்கு ஒரு நேரசூசிகிடையாது. அதனால்தான் பா– லாஅங்கிள் பஸ்ஸ்டான்ட் வரவில்லைப்போலும். அவன் கால்நடை யாகவே வீடுபோய்ச்சேர்ந்தான்.

பாலாஅங்கிளும் குடும்பத்தினரும் அவனைவரவேற்றது இனம் புரியாத இன்பமாகஇருந்தது. ம்..! எட்டாண்டுகள்...!

நேரம்போனதேதெரியாது.

அழிவுகள் அவலங்களென அங்கு நிகழ்ந்துவிட்ட ஆக்கிரமிப்பு இரத்தக்கதைகளைக்கேட்கக் கேட்க; வர்ணிக்கமுடியாத உணர்வு கள் எழுந்து தலைவிரிகோலமாய் மயிர்க்கூச்சலிட்டன.

கதையினூடே சுமதியைத்தேடி அவன் அடிக்கடிநோட்டம்– விட்டுக்கொண்டிருந்தான்.

அவள் வரவில்லை மனதின் மூலையில் சிறு ஏமாற்றம்.!

குளித்துச் சாப்பிடும்வரை பாலா அங்கிள் அவனுக்கு அவளைப்பற்றி எதுவுமே சொல்லவில்லை. பிறகுதான் சுமதியின் கதையைக் கூறினார்.

அவள் விடுதலைப்புலிகளுடன் இணைந்த செய்தியை தனக்குக் கவலை தருமென அவர்கள் இதுவரை தெரிவிக்காதுவிட்டதை - என்னவோ மதனால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை.

"என் தங்கையும் தமிழனுக்கு தலைநிமிர்வு தந்த தமிழீழ விடுதலைப்புலியா?" - அவன் மார்பு சற்று நிமிர்ந்தது -

இந்தியக் கூலிகளை ஓடவைத்த அவள் வீரத்தைக் கேட்ட போது அவளைக்காணவேண்டுமென்ற ஆவலே அவனுள் மேலிட்டது.

நீண்ட நேரம் யாருமே எதுவும்பேசவில்லை.!

இனம்புரியாத மௌனம்.

சம்பவ ஓட்டங்களில் ஒரு தனியம்.!

ஏதோ மௌன நாடகங்களில் வருவதைப்போல பாலாஅங்கிள் எழுந்துசென்று நிலத்தைத் தோண்டிக்கொண்டிருந்தார். சொற்ப நேரத்தில் அதற்குள்ளிருந்து நீளமான ஒரு பொருளை எடுத்துக் கொண்டு மறுபடியும் வந்துசேர்ந்தார்.

மதனுக்கு குழப்பம் தொடர்ச்சியானது -

அருகில்வந்த அவர் அவனது தோளைத்தடவியபடியே அறைக்குள் அழைத்துச்சென்றார். அப்பொழுதும் எதுவும் பேசவில்லை.

அங்கே சுமதி படத்திலிருந்தபடியே அவனைப்பார்த்து பாசத்துடன் சிரித்துக்கொண்டிருந்தாள்.

மெல்லிய காற்றுக்கு படத்திலிருந்த பூமாலை ஆடியது.!

காலுக்குக் கீழ் கண்ணிவெடி வெடித்ததைப்போல மதன் ஆடிப்போய்விட்டான். பாலா அங்கிளின் கண்கள் பனித்திருந்தது.
அவன் மனதிற்குள் ஆயிரம் மத்தாப்பூக்கள் வெடித்துச் சிதறின.

சென்றவாரம் நடைபெற்ற இந்தியப் படை முற்றுகையின்போது அவள் சைனைட் குப்பியைக்கடித்து வீரமரணத்தைத் தழுவிவிட்டாள்..!

மதன் ஊர்வரும் செய்தியும் அவளுக்கு ஏற்கெனவே தெரியும்.. தளர்ந்த குரலில் பாலா அங்கிள் கஷ்டப்பட்டு இவைகளை அவனிடம் ஒப்புவித்தார்.

"ஒருமாதம்.! ஆ..! காலம் எவ்வளவு கொடியது..!"

www.padippakam.com

## வள்ளுவர் வாக்கு..!





நிருபர், சுவாமி.! மாகாணசபை தமிழ்மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றுள்ளதாக நமது பத்திரிகைக்கு செய்தி எழுதிவிட்டேன். இதையார்சொ சொன்னதாக போடுவதென்று தாங்களே திருவா -ய் மலர்ந்தருளவேண்டும்.!

மாகாணமுதல்வர், ம்...யார் சொல்லியிருப்பார்கள்.? அ...திருவள்ளுவர் கூறியிருக்கிறார் என்று போட்டுவிடு.

---

"உங்களின் கண்களில் தெரியும் முதல் விடுதலைப்புலியிடம்இதை ஒப்படையுங்கள்..!" என்று கூறி பாலா அங்கிளிடம் அவள் கொடுத்துவைத்த அந்தத் நீளமான பையை அவர் மதனிடம் நடுங்கும் கைகளுடன் ஒப்படைத்தார்.

அவரிடம் ஒரு பெருமூச்சு.!

மதன் பையைக் கழற்றிப்பார்த்தான் பளபளக்கும் ஏ.கே 47 ரக இயந்திரத் துப்பாக்கி...

"பாலா அங்கிள் என்னையும் ஒரு விடுதலைப்புலியாக நினைக்கிறாரா?" அவனால் புரிந்துகொள்ளமுடியவில்லை.

"ஏ.கே.47 இயந்திரத்துப்பாக்கி.! இதை எப்படிஇயக்குவது?" பிரான்சில் அவனுக்கு இதற்கான பயிற்சி கிடையாது! இருப்பினும் சுமதியின் வழியில் தனது பணியைத்தொடர அவன்முடிவுசெய்கிறான்.

சுமதியின் படத்தின் முன்னால் அவனது எண்ணங்கள் ஊர்ஜிதமாயின.


மரணத்துக்கு மதிப்புக்கொடுக்காத விடுதலைப்புலிகளின் - ஆனந்த உலகத்தைத்தேடி பாலா அங்கிளையும் அழைத்தபடிகாடுகள் சூழ்ந்த ஏழாம் வாய்க்கால் பக்கமாக மதன் ஓடத்தொ தொடங்குகிறான்.

அந்த வழியிலும் ஒரு மூவர்ணச் சுவரொட்டி.! அதிலும் அழகான திலீபனின் உருவம்.

ஒருகணம் அதைத் திரும்பிப் பார்க்கிறான்-

திலீபன் மதனுக்காக தனது கையை அசைக்கிறான். ⦿

www.padippakam.com




தற்பொழுது டென்மார்க்கின் பல பாகங்களிலும் மேடையேற்றப்பட்டுவரும் ஈழத்தமிழர் கலையரங்கத்தின் "நிஜங்கள்" நாட்டுக்கூத்து இன்றைய தாயகம் திறனாய்வரங்கிற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஆறாவது தடவையாக ஓகுஸ் நகருக்கருகாமையிலுள்ள - கல்ஸ்றீன் என்ற இடத்தில் மேடையேற்றப்பட்டது. ஆறு மேடைகளிலும் ரசிகர்களின் ஆலோசனைகளின்படி பல மாற்றங்கள் செய்"ப்பட்டிருந்தது.

**மூலக்கதைச்சுருக்கம்,**

அன்னம்மா பொன்னர் என்ற ஒரு தமிழ்க்குடும்பம் இலங்கையில் பிரச்சனைகள் முடிவுற்று அமைதி நிலவுகிறதாக டென்மார்க் பிராந்திய றேடியோ செய்தியொன்றைக் கேட்டு ஈழம் திரும்ப முற்படுகின்றனர். இவர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து சொந்த ஊரான யாழ்ப்பாணம் போய்ச் சேரும்வரை சிங்களப்படை, இந்தியக் கைக்கூலிக்குழுக்கள், கட்டாக்காலிமாடுகளாக காட்டுத்தர்பார் நடாத்தும் இந்தியப் படை போன்றவற்றால் பலவித துயரங்களை அடைந்து, கடைசியாக பொன்னரின் மரணம் வரை கதை வளர்கிறது. ஈழமண்ணில் நடைபெறும் அவலங்களை- டெனிஸ் மக்களுக்கு விபரிக்கும் நோக்குடன் தயாரிக்கப்பட்டதே இந்த நிஜங்கள் நாட்டுக்கூத்து.

படிப்பகம்

www.padippakam.com

## கூத்துவடிவம்,

ஈழத்து நாட்டுக்கூத்து வழக்கில் வடமோடி தென்மோடிஎன இரண்டு பிரதான கூத்தாட்டமுறைகளே பண்டைக்காலத்தில் மிகமேலோங்கிநின்றது. காலம், இடம், சூழல் என்பவற்றிற்கேற்ப பல விதமான கூத்தாட்ட முறைகளையும் உள்ளீடுசெய்து, இக்கூத்து தயாரிக்கப்பட்டிருந்தது. என்றிக்எம்பரதேர், விஜயமனோகரன் போன்ற ஈழத்தின் பிரபல பண்டய கூத்துக்களின் வடிவங்கள் சிலதையும் பாரம்பரியமான எமது கலைகளைப் பேணும் நோக்குடன்சேர்த்திருந்தார்கள்.

## விடயஒப்புவிப்பும் உரையாடலும்,

பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் மனோன்மணீயம் முதல் ஈழத்தில் பேராசிரியர் கணபதிப்பிள்ளையவர்களின் நாடகங்கள்வரை கதாபாத்திரங்களின் உரையாடல்களில் படிமுறையானவளர்ச்சிநிலையை சந்தித்தது தமிழ்நாடக உலகம். நேரடித்தாக்குதல், மறைமுகமான நையாண்டி, நகைச்சுவை, பூடகமாக விடயங்களைக்கூறிச்செல்லல் போன்றவற்றில் தமிழ்நாடகஉலகில் மாற்றங்களை ஏற்படுத்திய பல நுண்பாககலைமுறைகளை தேடிஇணைத்திருந்தார்கள். சிலஇடங்களில் வரும் நையாண்டித்தனங்கள் மனதின் ஆழத்தில உத்தரவில்லாமலே உள்நுழைந்துவிடுகின்றன. படைப்பாளிகள்என்றபோர்வையல் மதில்மேற் பூனையாகிவிட்ட பல ஈழத்தப்படைப்பாளிகள் மத்தியில் இவர்களின் தனிச்சல் பாரதிகவிதைகளைப் போல அசாதாரணமாகவே தென்பட்டது.

## கூத்தில்புதுமை,

இற்றைக்குப்பல நூற்றுண்டுகளுக்கு முன்னரே மேலைத்தேயக் கலை வடிவங்கள் தமிழ் மொழியில் ஊடுருவல் செய்யத் தொடங்கிவிட்டன. மாறாக தமிழரின் கலைவடிவங்கள் மேலைத்தேயக்கலாச்சாரத்தில் எந்தளவு தூரம் ஊடுருவல் செய்துள்ளன என்பதை நோக்குவோமானால் நமது கலைகளின் தாக்கம் குறைவானதென்றுதான் சொல்லவேண்டும். மேலும் சூப்போட்டசண்டைகளும், யதார்த்தத்திற்குமுரணான காதல் காட்சிகளும் நிறைந்த தமிழ், இந்தி சினிமாக்களிலிருந்து பாதுகாக்கப்படவேண்டிய ஒரு இக்கட்டானநிலையிலேயே நமது கலைவடிவங்கள் போராடிக்கொண்டிருந்தன என்றுதான் கூறவேண்டும்.

நிஜங்கள் நாட்டுக்கூத்தில் தமிழ்ப்பாடல்களுடன் டெனிஸ்வசனங்களையும் கலந்து பாடுகிறார்கள். இம்முயற்சி புதிய பரிசோதனையாகும். டெனிஸ் நாடகக்குழுவினர் பலர் இதுபற்றி என்னுடன் கதைத்தபோது தமிழ்நாட்டுக்கூத்து வடிவம் டெனிஸ் நாடகத்துறையில் பிரவேசித்த முதல்அடியென இதைக் குறித்துக்கொள்ளவேண்டுமென என்னிடம் கூறியது இங்கு நோக்கற்பாலது.

## சமுக சீர்திருத்தம்,

நிஜங்கள் என்ற தலைப்பிற்கேற்ப தனியே தமிழீழத்தின் இன்றைய நிலைபற்றி மட்டும் இங்கு இவர்கள் விபரிக்கவில்லை. வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் குறிப்பாக டென்மார்க்கில் வாழும் தமிழரிடையே சிலர் தேசவிடுதலையை மறந்து சீட்டும் சிங்கப்பூர் நகையும், பிறந்தநாளுமாக வாழும் கல்லுளிமங்கத்தனங்களை அவர்கள் வரிந்துகட்டிக்கொண்டு மேடைக்கேறாத வண்ணம்நாசூக்காக தொட்டுச்செல்கிறார்கள். பல சந்தர்ப்பங்களில் ரசிகரிடையே மண்டபம் நிறைந்தசிரிப்பொலி எழுகிறது. ஆனால் அதேசிரிப்புக்கள் அவர்களை சிந்திக்கிறார்களென்பதையும் கோடிட்டுக்காட்டுகிறது. இதேபோலவே அகதிகள் வருவதுதொடர்பாக டென்மார்க் அரசின் புதிய சட்டவிதிகளையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை.

## ஆவிகள் நடனம்.

கூத்தில் இரண்டு ஆவிகள் நடனமாடுவதாக ஒரு காட்சிவருகிறது. இந்த ஆட்டமுறை சற்று வித்தியாசமானது மலைநாட்டுப்பகுதியில் வருடாவருடம் ஆடப்பட்டுவரும் காமன்கூத்தில் வரும் நடனத்தன்மை அங்கு சுடர்விட்டது. கண்டர், சின்னத்தை என்ற இரண்டு ஆவிகள் பாடுவதாக காட்சி உள்ளது. இந்தியப்படை வந்தபின்பு ஈழத்தில் பேய்களே வாழமுடியாதளவிற்கு அவலநிலைதோன்றியுள்ளதாக இவைகூறுகின்றன. சின்னத்தை ஒடியல்மாவிலை புட்டவிச்ச குற்றத்திற்காகவும், கண்டர் கறிசமைக்கும்போது உப்பை அதிகமாகப் போட்ட குற்றத்திற்காகவும் இந்தியப்படையால் சுடப்பட்டு இறந்துள்ளனர். இதில் கேள்விபதிலாக ஒரு பாடல் வருகிறது,

நமது நாட்டிலை இங்கை திரும்பினால்..?
இந்தியப்படை.
அங்கைதிரும்பினால்.....?
ஆகாயப்படை.
நடந்துபோனால்.......?
மட்டையடி.
அரைறாத்தல் பாண்....?
அம்பது ரூபா.!
அரைமணிக்கொருக்கா...?
ஊரடங்குச் சட்டம்.!
ஆயிரம் வோட்எடுத்தால்...?
எம்.பீ.பதவி.!

என்று இரண்டு ஆவிகளும் பாடுகின்றன. இப்படி பேய்களாகிய நாங்களே வாழமுடியாத நிலையிலிருக்கும்போது அன்னம்மா, பொன்னராகிய இருபாத்திரங்களும் இங்கு எதற்காக வருகிறார்களென ஒரு ஆவி வினவுகிறது அதற்குப்பதிலாக ஒடியல்மாவிலை புட்டவிக்கவென்று மறு ஆவி கூறிவட்டமாக வருகிறது இந்தவட்டமான ஆட்முறையில் காமன்கூத்தாட்டமுறை உச்சநிலையடைகிறது.


## நோக்கம்:


கடந்த வருடம் தமிழீழ விடுதலைப்புலிகளின் துண்டுப்பிரசுர மூலம் தமிழீழத் தேசாபிமானிகளனைவரும் மேலைநாட்டு மக்களுக்கு நமது நாட்டின் நிலையை எடுத்துக்காட்டி இந்திய ஆக்கிரமிப்புப் படைகளுக்கெதிராக ஒரு சர்வதேச அபிப்பிராயத்தை உருவாக்க ஒவ்வொரு தமிழனும் பாடுபட வேண்டுமெனக் கேட்டிருந்தார்கள். அதைமையமாகக் கொண்டே தாம் இந்தமுயற்சியில் இறங்கியுள்ளதாகக் குறிப்பிட்டனர். ஐந்து டெனிஸ்மக்கள் கூடியிருந்தாலும் அவ்விடத்திலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் மகத்தான போராட்டத்தின் அவசியத்தை வலியுறுத்திப் பிரச்சாரம் பண்ணுவதற்கு தமது நாடகக்குழு தயாராகவே செயற்படுவதாக எம்மிடம் தெரிவித்தனர். அவர்களுடைய நோக்கத்தில் தமிழீழத் தேசாபிமானம் எழுச்சிபெற்றிருந்தது.

## குறைபாடுகள்,

ஐரோப்பிய நாடொன்றில் இப்படியான பெருமுயற்சி குறைபாடுகளுக்கு அப்பாற்பட்டசெயலே. இருப்பினும் இசைக்கருவிகளை மேலும் சேர்ப்பது நன்று. ஆரம்ப மேடைகளில் நடித்த நடிகர்களில் சிலர் நடிப்புத்துறைக்குப் புதியவர்களாக இருந்ததால் பல இடங்களில் குறைபாடுகள் ஆங்காங்கே தெரிந்தது ஆயினும் ஆறுவது மேடையில் அனேகரின் வேண்டுகோளின்படி பல நடிகர்கள் முற்றுக மாற்றப்பட்டு, அனுபவமிக்க, ஈழத்து மேடைகளில் பிரபலம்பெற்ற பல நடிகர்களால் நடிக்கப்பட்டபோது மேற்கண்டகுறைபாடும் முற்றுகக் களையப்பட்டிருந்தது. தமிழீழ விடுதலைப்புலிகளால் ஈழத்து மேடைகளில் நடித்துக்காட்டப்பட்ட பல கூத்துவடிவங்களின் தாக்கங்களும் இவர்களிடையே நிறையவே இருந்தது ✶

அமைதிப் பணியும், ஆட்சித் திறனும்.!





# கேள்வி பதில்

## 1

வைத்தி — ஓகூப்

கேள்வி; தமிழீழ விடுதலைப்புலிகள் இலங்கை அரசு பேச்சுவார்த்தைகளின் முதற்கட்டம் எந்தளவு தூரம் வெற்றிகரமானது?

பதில், இலங்கைஅரசு இந்தியாவை வெளியேறும்படி பகிரங்கமாகக் கேட்டுக்கொண்டது புலிகளின் முதற்கட்டப் பேச்சுக்களுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

## 2

சன் — மே. ஜேர்மனி

இந்திய இராணுவம் வெளியேறினால் பின்னர் சிங்கள இராணுவத்திடமிருந்து தமிழ்மக்களைக் காப்பதுயார்?

பதில், இந்திய இராணுவம் இல்லாதபோது சிங்கள இராணுவத்திடமிருந்து தமிழ் மக்களைப் பாதுகாத்தது யார்? தமிழீழ விடுதலைப்புலிகள்தான் என்பதில் யாருக்கும் ஐயமில்லை. மேலும் தற்போதைய சூழ்நிலையில் தமிழ்மக்கள் பாதுகாப்பாக வாழவேண்டுமானால் இந்திய இராணுவம் அப்புறப்படுத்தப்படவேண்டியதுதான் முதல் தேவையாகும். அவர்கள் அமைதிப்படையல்லஆக்கிரமிப்புப் படைதானென்பது எப்பொழுதோ ஊர்ஜிதமாகிவிட்டது. உங்கள் கேள்வி இந்திய இராணுவமும், ஈபீஆர்எல்எப்பும்- ஏதோ தமிழ்மக்களைப் பாதுகாக்கும் படையினர்என்ற பிழையான இடத்திலிருந்து உருப்பெற்றிருக்கிறது.

## 3

மோகன் — நோர்வே.

கேள்வி; ஈரோஸ் இயக்கம் இந்தியாவை வெளியேறவேண்டாமென்கிறது, பின்னர் புலிகள் அரசு பேச்சுவார்த்தையை வரவேற்கிறது. பாராளுமன்றப் பதவிகளால் பிரச்சனைகள் தீராதென்கிறது, பின்னர் பாராளுமன்றத் தேர்தல்களில் போட்டியிடுகிறது. இந்தியப்படை வெளியேற்றம் குறித்து இவர்கள் வெளியிட்டுள்ளஅறிக்கையின் நோக்கம்யாது?

விடை; முன்னர் தமிழரசு, தமிழ்காங்கிரஸ் தேர்தல் காலங்களில் அக்கட்சிகளின் வேட்பாளர்கள் தேர்தல் துண்டுப்பிரசுரங்களில்-விவசாயிகளின் நண்பன், மீனவரின் தோழன், பாட்டாளிமக்கட்டாளி...... ஆகியஇவரை ஆதரியுங்களென விளம்பரம்செய்வார்கள் இதன் நோக்கம் சகல சமூகங்களின் வாக்குக்களையும்-பெறுவதற்கான ஒரு உத்தியே. இதுபோலத்தான் ஈரோசும் -சகலபகுதிகளையும் சாந்தப்படுத்துவதற்காக ஒரு பொதுவான அறிக்கையைத் தயாரித்துள்ளது. கொழும்புக்கு கோட்டும் சூட்டும், யாழ்ப்பாணத்துக்கு சந்தணப்பொட்டும் வேட்டிசால்வையுமாக வரும் பழைய பொன்னம்பல காலத்து அரசியல் உத்திகள் நயகாலத்துக்கு பொருந்தாது. இந்திய இராஜதந்திரத்திற்கே-ஆப்புவைக்கும் ஆளுமைத்திறன் கொண்டது விடுதலைப்புலிகளின் -இராஜதந்திரம் ஆகவே நீர் இதைபற்றி குழம்பவேண்டியதில்லை.

## 4

மோகன் நோர்வே.

கேள்வி; எனது நண்பர் ஒருவர் தனது பகையாளியான பக்கத்துவீட்டுக்காரர் தமிழீழ விடுதலைப்புலிகளை ஆதரித்து வருவதால் தனது அயலவருக்கு எதிராக செயற்பட வேண்டுமெனநினைத்து விடுதலைப்புலிகளை எதிர்க்கமுற்பட்டுள்ளார். அதற்காக விடுதலைப்புலிகள் மீது பழி சுமத்தக் காரணங்களைத் தேடி ஓடுகிறார் இவரை எப்படித்திருத்தலாம்?

பதில்; கடந்தகாலங்களில் சிங்களவன் நமது எல்லைகளில் குடியேற்றங்களைச் செய்து கொண்டிருந்தபோது, நம்மவர்கள் வேலிச்சண்டைகளிலீடுபட்டு வெட்டிப் பொழுது போக்கியதால்தான் நம்இனமே சீரழிந்தது. விடுதலைப்புலிகளின் போராட்டத்தால்-உலகத்தமிழினமே தலைநிமிர்ந்து நிற்கும்போது, நம்மில்சிலர்இப்படி நடப்பது வெட்கக்கேடான விடயமாகும். விடுதலைப்புலிகள் நமது இயக்கமென நாமெல்லாம் ஒன்றுபடுவதுதான் இனி எமது இனத்துக்கு எழுச்சிதரும் ஒரேசெயலாகும்.

## 5

சீலன் கேர்னிங்

கேள்வி; நான் ஒரு புளொட் ஆதரவாளன் புளொட் தமிழீழம் அமைக்குமென நானும் எனது நண்பர்களும் திடமாக நம்புகிறோம் நீங்கள் இதையேன் மறுக்கிறீர்கள்?

விடை; புளொட் மாலைதீவில் தமிழீழத்தை அமைக்கமுற்பட்டபோதாவது தமிழீழம் பற்றிய புளொட்டின் புரிந்துணர்வை நீங்கள் விளங்கிக்கொண்டிருக்கவேண்டும். அதுவே உங்களுக்கான கடைசி சந்தர்ப்பம். கானல் நீரில் மீன்கிடைக்குமென நம்பும்உமது செயலை நம்மால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. அதேவேளை-உம்மைப்போல சிலர் இப்பொழுதும் புளொட்டை ஆதரிக்கிறார்களென்பதைக் கேள்விப்படும்போது சிரிப்பாகவுமிருக்கிறது.

www.padippakam.com


## 6

கன்னன் — கேர்ணங் .

கேள்வி, தாயகத்தை கையெழுத்துச் சஞ்சிகையாக மாற்றிவேகமாக வெளியிடலாமே?

பதில்; தாயகம் வேகமாக வெளிவரவேண்டுமென்ற தங்கள் நோக்கத்தை நாமும் வரவேற்கிறோம், ஆனால் நூல் வெளியீட்டுத்துறை வரலாற்றில் வளர்ச்சிநிலையின்போது கையெழுத்து நிலையிலிருந்து அச்சுக்கலைக்குள் பிரவேசிப்பதே படிமுறைவளர்ச்சியாகும். தாயகத்தை நாம் கொம்பியூற்றர் மூலமான வெளியீட்டுநிலைக்கு மாற்றுவதற்கான வேலைத்திட்டங்களை நிறைவுசெய்துகொண்டிருக்கிறோம் ஆகவே கையெழுத்து நிலை நம்மைப் பொறுத்தவரை பின்நோக்கிய ஓட்டமாகவே தெரிகிறது.

## 7

கே.ஞானம் — கொல்ஸ்ரபோ


கேள்வி; தற்போது சிலர் தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்கு எந்தவித பங்களிப்பும் செய்வதில்லை. வேறுசிலர் ஊரில்பணம் வாங்கிவிட்டார்களென்று கூறுகிறார்கள். மேலும் சிலர் சீதனம்சேர்க்கவேண்டுமென்கிறார்கள் இவர்கள் பற்றி தங்கள் கருத்து யாது?

பதில்; தமிழீழப் போராட்டத்திற்கான உதவிகளை நாம் வன்முறைகளினால் பெறுவதில்லை. எமது தெளிவான அரசியல் கருத்துக்களை மக்கள்மத்தியில் வைத்து, அவர்களிடையே ஏற்படும் புரிந்துணர்வின் மூலமே எமது இயக்கத்திற்கான ஆதரவை வளர்த்துவருகிறோம். விடுதலை உணர்வின்றி உண்மையாகவே தூங்கியபலரை நாம் எமது பிரச்சாரங்களின் மூலம் விழிப்படையச்செய்திருக்கிறோம். நீங்கள் குறிப்பிடுவபர்கள் தூங்குவதுபோல நடிப்பவர்கள் பொங்கிவரும் தமிழீழ விடுதலைப்பேரலையில் இவர்கள் விழித்தேயாகவேண்டிய சூழ்நிலை எதிர்காலத்தில் வரும். சோசலிச தமிழீழம் என்ற விடுதலைப்புலிகளின் அரசியல் வேலைத்திட்டத்தைப் படித்த பல மாற்று இயக்கக்காரர் பெரும் மனமாற்றமடைந்திருப்பதாக அறிகிறோம்.

---

நாம் மோதிக்கொண்டிருப்பது
ஒரு அந்நிய ஆக்கிரமிப்பு இராணுவ
த்துடன் இந்தநிலையில் நடுநிலை
யென வேதாந்தம் பேசுவது
தவறுகளின் இமாலயமாகும்.

## தாயகம் தொழில் நுட்பப் பிரிவு..!




# டென்மார்க்கில் கைத்தொழில் மயக் கட்டிடங்கள்....!

கே.எஸ்.துரை

நமது தமிழீழத் தாயகம் அந்நிய ஆக்கிரமிப்பாளர்களால் பல வழிகளிலும் பெரும் பாதிப்படைந்துள்ளது. நமது பொருளாதாரம், தொழில்நுட்பம், கட்டுமானப்பணிகள், கைத்தொழில், விவசாயம் போன்ற பலதுறைகளிலும் எமது தாயகத்தின் வளர்ச்சி நிலைகள் யாவும் பெருவீழ்ச்சிகண்டுள்ளன. எதிர்காலத்தில் இவற்றைப்புனர் நிர்மாணம் செய்யவேண்டிய பாரிய பொறுப்பு எமக்காகக் காத்துக்கிடக்கிறது. தமிழீழத் தேசாபிமானிகள் இன்று வளர்ச்சியடைந்த மேலைத்தேயங்களிலெல்லாம் பல்லாயிரக்கணக்கில் பரந்து காணப்படுகிறார்கள். இவர்களில் பலர் மேலைத்தேயத்தொழில் நுட்பத்துறையில் நிறைந்த தேர்ச்சியும் பெற்றுள்ளார்கள். விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் போன்றபல்வேறு துறைகளிலும் உள்ள தமிழர்களின் துறைசார்ந்த எண்ணிக்கையாது? இவர்களை எவ்வகையில் தமிழீழத்தின் விருத்திக்குப்பயன்படுத்துவது? இங்கு காணப்படும் நவீன தொழில்நுட்பங்களைஎமது நாட்டுக்கேற்றவகையில் எவ்வாறு மாற்றியமைப்பது போன்ற திட்டங்களை துரிதமாகவகுக்கவேண்டிய தேவையுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே தாயகத்தில் இதுபற்றி அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தியிருந்தோம். தற்பொழுது தாயகத்தில் தொழில்நுட்பப்பிரிவு என தனியான ஒருபகுதியை ஏற்படுத்தியுள்ளோம். தங்களிடமிருந்து தொழில் நுட்ப ஆலோசனைகளும் ஆக்கங்களும் வரவேற்கப்படுகின்றன.

டென்மார்க் பாற்பண்ணைத்துறையல் உலகில் பிரபலமான- ஒரு நாடென்றுதான், இலங்கையில் எமது பாடப்புத்தகங்கள்தகவல் தருகின்றன. இக்கூற்று முற்றிலும் உண்மையானதல்ல சர்வதேசஅரங்கில் இன்று டென்மார்க்கும் ஒரு வளர்ச்சியடைந்த கைத்தொழில்மயநாடே.! கடின உழைப்பும் தேசபக்தியுமே இவர்களின் வளர்ச்சிக்கு மூலகாரணமாகும்.

www.padippakam.com



டென்மார்க்கின் கட்டிடத்துறைக்கும், தமிழீழத்தின் கட்டிடத்துறைக்கும், காலநிலை காரணமாக கட்டுமான உபகரணங்களில் பாரிய இடைவெளி உள்ளது. ஆனால் கட்டிட வரைபுகளும், அவற்றை உருவாக்குவதற்கும், பொருத்துவதற்கும் கையாளப்படும் தொழில்நுட்பங்களும், ஆரம்ப மட்டத்திலிருந்து இன்றய வளர்ச்சி நிலைவரை பல இடங்களில் எமது நாட்டிற்கு மாற்றியமைக்கக் கூடிய சாதகத் தன்மைகொண்டுள்ளன.


பாரிய கட்டிட நிர்மாணப்பணிகள் தவிர ஏனைய தனியார் வீடுகளை உருவாக்கும் சிறு அளவிலான கட்டிடங்களுக்கு நமது நாட்டில் விஞ்ஞான பூர்வமான அணுகுமுறைகளின் தாக்கம் மிகவும் குறைவாகவே உள்ளது. பரம்பரையான தொழிற்தேர்ச்சிமுறைகளே பெருமளவில் முனைப்புப்பெற்றுள்ளன. இவற்றில் சில சீர்திருத்தங்களைச்செய்து, திட்டமிட்ட அடிப்படையில் நவீன கட்டிடத்தொழில்நுட்பத்தை நமது நாட்டிற்குள் உள்ளீடுசெய்யவேண்டிய தேவை தற்போது நமக்குள்ளது.

### அடிப்படைச்சட்டங்கள்,

இங்கு "புய்க்கறலிமன்ற்" என்னும் கட்டிடம் சம்மந்தமான சட்டவியல் நூல் நான்கு வருடங்களுக்கொருமுறை டென்மார்க்கில் வெளியாகிறது. நிலத்தை வாங்கி அத்திவாரத்திற்காகஅகழ்வதுமுதல், கட்டிடம் கட்டிமுடிப்பதுவரை சகல விடயங்களும்இந்த நூலில் குறிப்பிடப்படும் சட்டங்களைத்தழுவியே அமைக்கப்பட( வேண்டும். அல்லாதபட்சத்து அவற்றைப்பாவிக்கமுடியாது. சீமெந்துக்கலவை உட்பட கட்டிடத்தின் எல்லா உபகரணங்களும் எந்தளவில் இடம்பெறவேண்டுமென இந்நூல் வலியுறுத்தும். இதன் தரக்கட்டுப்பாட்டுக்குட்பட்டே தொழிற்சாலைகளும் உபகரணங்களை உற்பத்திசெய்யும். ஆகவே கட்டிட மோசடி, சட்டமீறல்களுக்கு வாய்ப்புக்கள் குறைவு. இதைத்தவிர "நோம்" என்றுமற்றோர்பிரதான நூலும் வெளியாகிறது. இது டென்மார்க்கின்பொறியியலாளர் கூட்மைப்பால் வெளியிடப்படுகிறது. கட்டிடத்தின் -
லப்பொருட்கள் பற்றி விஞ்ஞான பூர்வமாக வருடாவருடம்ஆய்
கள் செய்து கட்டிடப்பணிக்காக புதிய புதிய ஆலோசனைக-
இது வழங்குகிறது.

## திட்டப்படங்கள்,

கட்டிடத்தின் முழுப்பகுதியும் திட்டப்படமாக வரையப்பட- வேண்டியது இங்கு சட்டமாகும். மேலும் ஒவ்வொரு பொருத்துக் களும் எவ்விதம் அமைய வேண்டுமென்பது பிரத்தியேக விபரப்படங்களாக இடம்பெறும். இந்தவகையில் அளவுக்கோடுகளென்பது மிகப்பிரதானம்பெறுகிறது. பூமியின் மேல்வரையப்பட்டதாகக்கருதப்படும் அகலக்கோடு, நெடுங்கோடுகளைப்போல கட்டிடத்தின் கிடைத்தள ரீதியாகவும் உயர ரீதியாகவும் இவை வரையப்படும். கட்டிடத்தைஅமைப்பதற்குரிய செங்கற்களின் எண்ணிக்கைகளைக்கூட- இதன்மூலம் திருத்தமாகக்கணக்கிட்டுக்கொள்ளலாம். வீட்டின் நீளம் அகலம், உயரம், கதவு




ஜன்னல் என்பன போன்ற அனைத்தும் திட்டப்படியே அமைவதற்கு இந்த 'மொடல் லைன்' முறை மிக மிகஅவசியமானதாகும். விரயங்களைத்தவிர்க்கவும், திட்டப்படியே கட்டிடங்களை உருவாக்கவும், எமது சீமெந்துக்கற்களையும் இந்த மொடல் லைன் முறைக்குள் கொண்டுவருவது இன்று தவிர்க்கமுடியாத அடிப்படைத்தேவையாகும்.


## தொழிற்சாலைக் கட்டிடஉருவாக்கம்.

வேகமாக கட்டிடங்களை உருவாக்குவதற்கு இயந்திரமயமாக்குதலென்பது இங்கு பிரதான இடத்தைப்பெறுகிறது. சுவர்கள், கூரைகள் போன்ற கட்டிடத்தின் பிரதான பகுதிகள் பாரிய அளவில் தொழிற்சாலைகளிலேயே உருவாக்குகிறார்கள். இந்தவகையில், தூண்கள், சான்ட்விச் சுவர்கள், கூரைகள் என்பன தொழிற்சாலைகளிலேயே உருவாக்கப்படுகின்றன. மேலும் இவற்றைப் பொருத்தும் பணிமட்டும் கட்டிடப் பகுதியில் மேற்கொள்ளப்படும். இந்தத் தொழிற்சாலை முறையானது மேலும் விருத்தியடைந்து அறைகளை பெட்டிவடிவில் தொழிற்சாலைகளிலேயே உருவாக்கி பொருத்தும் முறைக்கும் விருத்திபெற்றுள்ளது.


## தமிழீழத்திற்கு ஏன் இத்தகைய கட்டிடங்கள் தேவை?

இன்று தமிழீழத்தில் மக்கள் அழிவுகளைப்போல கூடுதலான அழிவுகளைச்சந்தித்திருப்பது நமது கட்டிடங்களே. எனவேவிரை

kam.com







வான தொடர்மாடி வீடமைப்புக்கள் நமக்குள்ள அவசரதேவைகளில் ஒன்றாகும். பெரும்பாலும் நமது பழைய நகரமைப்புமுறைகள் நீண்டவீதிகளைக்கொண்ட நாடாக்குடியிருப்புநிலைசார்ந்தே அமைவுபெற்றுள்ளது. இதைமாற்றி வட்டவடிவில், மையப்பகுதிக்கு ஆரையளவு ஊரும் மட்டுமே தொடர்புகொண்ட மையக்குடியிருப்புக்களை ஏற்படுத்தவும் இது வாய்ப்பாகும்.


டென்மார்க்கிலுள்ள உயர்தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் கட்டிடநிர்மாணத்துறை விரிவுரையாளரான பிறேபன்கொலம் அவர்களுடன் ஈழத்தின் கட்டிட உருவாக்கம் குறித்து தாயகத்தின்சார்பில் தொடர்புகொண்டோம். டெனிஸ் கட்டிடத்தொழில்நுட்பத்துறையில் பல தமிழர்களுக்கு விரிவுரையாளராகவிருந்து வழிநடத்தும் பெருமை இவருக்குண்டு. அண்மையில் 300பேரைத் துணையாக வைத்து மூன்றேநாட்களில் பெரியதோர் தேவாலயத்தை கட்டிமுடித்து இவர் ஓர் சாதனை புரிந்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.


திரு. பிறேபன் கொலம்.
(கட்டிடக்கலைஞர்)



படிப்பகம்

www.padippakam.com





தமிழீழத்தில் தொழிற்சாலைகளில் உருவாக்கப்படும்கட்டிடங்களை அமைப்பதற்கு சில மாற்றங்களைச் செய்யவேண்டியிருப்பதாக இவர் தெரிவித்தார். இத்தகைய கட்டிட முறைகள் - டென்மார்க்கில் பெருமளவு மனிதவளங்களை பயன்படுத்துவதில்லை. ஆனால் ஈழத்தில அதிக மனிதவளமுள்ளது. ஆகவே அவற்றைச் சிறந்தமுறையில் பயன்படுத்தக்கூடியவாறு மாற்றுத்திட்டங்களை வகுக்கவேண்டுமென்றுகுறிப்பிட்டார். டெனிஸ் கட்டிடத்துறைநுட்பங்களை போலந்து நாட்டுக்கு மாற்றியமைக்கும் பணியிலீடுபட்டு இவருக்கு நிறைந்த அனுபவங்களுண்டு. இதேபோல இத்தகைய - தொழில்நுட்ப முறைகளை ஈழமண்ணிற்கும் மாற்றியமைக்கவேண்டுமென்றும் இதற்கு தம்மாலான ஒத்துழைப்புக்களை நல்கக்காத்திருப்பதாக தெரிவித்தார்.

கட்டிடமூலப்பொருள் ஆய்வு, ஊண்கள் வளைகளைதெரிவுசெய்யும் கணிப்பீடுகள், கால்வாய்அமைப்பு, கழிவுநீர்க்கணிப்பீடுகள், வெப்பதட்பத்திற்கேற்ப கட்டிடங்கள் சுருங்கி விரியும்கணக்குகள், கட்டிடத்தினுள் வாயுச்சுற்றோட்டம், குடிநீர்பைப்புக்கள், மின்சார தொழில்நுட்பம், போன்றவற்றிலிருந்தெல்லாம் பலவிடயங்கள்ஈழத்திற்கு மாற்றீடுசெய்யக்கூடியவகையிலேயேஉள்ளன. பக்கங்கள் இடம்கொடாமையால் மேலும் விரிவாக ஆராயப்படவில்லை. இவற்றை தனியாக தயாரிக்கும் முயற்சியில் தாயகம் தொழில்நுட்பப்பிரிவு இறங்கியிருப்பது இங்கு மிகவும் வரவேற்கத்தக்கது.

---

வாசகர்களே! இம்முறையிலிருந்து தாயகத்தின் விலை 10 Kr.

அட்டைப்படம் சிவன்

# யாதும் ஊரே

வானம் இருளடைந்து காணப்பட்டது. இருந்தாலும் அங்கொன்றும், இங்கொன்றுமாக இடையிடையே விண்மீன்களும் கண்சிமிட்டிக்கொண்டிருந்தது. கீழ்வானம் விடியலின் அடையாளமாக சிவந்துபோயிருந்தது. விடியலொன்று இருக்குமாயின் செம்மை, விடியற்புரட்சியின் அடையாளம்போலும். இந்தமண்ணும் எத்தனை உயிரத்தங்களால் தன்னுடலைச் சிவப்பாக்கிக்கொண்டிருக்கின்றது. ஒருநாளா? இரண்டுநாளா? எத்தனையாண்டுகள்? புரட்சியின் வெம்மையில் சீறிப்பாய்ந்தோடிய உயிரத்தங்கள். என்றாலும் இம்மண்ணுக்கு இன்னுமே விடியலில்லை.

எண்ணச்சிதறல்களைத் தன்னுள்ளேயடக்கிப்பெருமூச்சொன்றைமட்டும் உதிர்ந்து சீறும் கடற்கரைக்காற்றோடு கலக்கவிட்டு நடந்துகொண்டிருந்தான் ராசன்.

"ராசன்" சுருண்டுகிடந்த கேசம் பலநாட்களாக சீவப்படாததால் சீரற்று இருந்தது. எடுப்பான மூக்கும், பரந்த நெற்றியும், விரிந்த மார்பும், சக்திக்குமீறிய துடிப்பும் கொண்ட அவனிடம் அந்த இரண்டு விழிகளில்மட்டும் ஏனோ எல்லைமீறிய சோகம், ஏக்கம், தவிப்பு இன்னும் என்னவோ, மற்றவர்களால் தீர்மானமாகச் சொல்லமுடியாத ஏதோவொன்று. ஆனாலும் அந்தக்கிராமத்துக்கு அவனொரு அனாதை இரட்சகன். யார்வீட்டில் என்ன தேவையோ, யாருக்கு எந்த உதவியோ ராசன் முன்னின்று உதவுவான். இருந்தபோதும் அவன் யாரென்பது யாருக்குமே இதுவரை தெரியாது.

ரத்தமணி கொலின்ஸ்ரவேரா

www.padippakam.com

ஊர்ப் புதினங்கள்...!



நாலுமுறை எலெக்சன் கேட்டுக் கட்டுப் பணமிழந்ததாலை காசி இராமேஸ்வரம் என்டு புறப்பட்ட ஐயம்பிள்ளைப் பிரக்கிராசியார், இப்ப ஈழத்திலை ஆயிரம் - வோட்டெடுக்கிற ஆக்களெல்லாம் எம்.பீ யாக வருகினமெண்ட செய்தி கேள்விப்பட்டு புது நம்பிக்கையோடை நாடு திரும்பியிருக்கிறாராம்.



சூசைக்கிழவன் கடலையே வெறித்துப்பார்த்துக்கொண்டிருந்தான். மனங்கப்பியவேதனை நெஞ்சு நிரம்பி, கண்களில் கண்ணீராக வழிந்துகொண்டிருந்தது. எதையுமே சட்டைசெய்யாமல் இந்த அதிகாலைவேளையில் கடலையே பார்த்துக்கொண்டிருக்கும் அந்த உருவம் யாராயிருக்கலாமென ஐயுற்ற நெஞ்சத்தோடு அரவமில்லாத கடற்கரையை நோக்கி மெல்ல மெல்ல நடந்து வந்தான் ராசன். பக்கத்தில் வந்துவிட்டான், கிழவன் அசையவில்லை. ஆமிக்காரன் துப்பாக்கியை நெஞ்சில்வைத்தால்கூடக் கிழவன் அசைந்திருக்கமாட்டுது. முகத்தைப்பார்த்த ராசன், "உதார் சூசையப்பரே" எனக்குரல்கொடுத்தபிறகுதான் சூசை செட்டைத்துண்டால் முகத்தைத்துடைத்துக்கொண்டு ராசனைப் பார்த்தார். பார்வையும் ஏதோதாவென்றிருந்தது.

"அப்பா" என்ன இந்தவிடியக்காலையிலை, என்னசெய்யிறியள்"

"உதார் தம்பி? நீரே...." இது சூசையப்பா.

"நான் கரைகடைவழியாக வரும்போது தூரத்திலேயே பாரத்தேன். உதார் இந்தநேரத்திலை இருக்கிறதெண்டு, கிட்டவந்து பாத்தா நீங்கள். அதுதான் விசாரிச்சனான். இது ராசன்.

"ஊகும்....." பெருமூச்சொன்றை விட்டபடி சவரஞ்செய்யாத கன்னத்தைக்கைகளால் தடவிக்கொண்டார், பின் மெல்லக்கையூன்றி இருந்த இடத்தைவிட்டு எழுந்துநின்ற சூசையப்பா செருமிக்கொண்டே சொல்லத்தொடங்கினார்.

"தம்பி, இந்த ஓடக்கரைதான் எங்கடை தலைமுறைச்

www.padippakam.com


சொத்து. இந்த இடத்திலைதான் அப்புவை எதிர்பார்த்துக் கடலையே பாத்துக்கொண்டு ஆச்சியெனக்குப்பால்தாறதெண்டு சொல்லுவா. விருவறிஞ்சநாளிலையிருந்து இண்டுவரையும் நான் எத்தினையலுவலைப்பாத்திருப்பன், என்ரைபிள்ளைகுட்டியை வளத்திருப்பன், எத்தினை கல்வீட்டைக்கட்டியிருப்பன், எத்தினை கலியாணத்தைச்செய்துவைச்சிருப்பன், உதெல்லாமே இன்னும் எத்தினையள். இதுக்கெல்லாம் இந்தச்சீமாட்டிதானே காரணம்." குசையப்பாவுக்குக் கண்கள் கலங்கிவிட்டது. பின்னும் தொடர்ந்தார்.

"பத்தியெரிவான், பரிநாசமாப்போவான் உந்தச் சிங்கள நாசமறுவான்ரை பேராசை, ஐஞ்சுவருசம், பத்துவரு



சத்துக்கொருக்கால் தமிளன்ரை கடையைக்கண்ணியை நொறக்கிக் கடைசியிலே பொடியள்ரை படிப்பிலைகைவச்சு, இஞ்சாலை திருக் கணமலை, மட்டக்களப்பு வழியாய் முல்லைதீவுவரையும், அங்காலை புத்தளம், சிலாவம் வழியாய் மன்னூர், நாயாறு வரையுமெல்லே குவியத்தொடங்க, பொடியள்; அதுதான்தம்பி எங்கடைபொடியள் பொறுக்கமாட்டாமை இந்தத்தத்தக்கப்பித்தக்காச் சிங்களப் படையோடை போர்பொருதத்தொடங்கினதுகள்.

"குறை விளங்காதையுங்கோ ஆசையப்பா, உங்கடை கட்ற் சீமாட்டியிலைதொடங்கி, விடுதலைக்காகப்போராடுகிற தமிழ் ஈழத்தம்பிமாரிலை வந்து நிக்கிறியள்" ராசன் புரியவில்லையென் பது போலப் பாவனை செய்தார்.

"கொஞ்சம்பொறுதம்பி, நானின்னும் விசயத்துக்கே வரேல்லை. ஆசையப்பா விடயத்தைத் தொடங்க முற்பட்டா லும், அவரின் முகபாவம் கவலையின் கட்டுப்பாட்டிலிருந்து, தமிழீழ விடுதலைப்போராட்ட நிகழ்வினைக் கூறியவேளையில் உடலில் ஒரு உத்வேகமும், உள்ளத்தில் துணிப்பும், விழிகளில் நம் பிக்கை ஒளியும்; தென்பட்டதை ராசனும் உன்னிப்பாகக் கவனிந் தான்.

தன்னைப்போல இந்தமண்ணுக்கு விடுதலையொன்றை மீட்டெடுக்க களத்திலே நின்று போராடுகின்ற இளைஞர்கள் மட்டுமல்ல, இந்த மண்ணின் ஒவ்வொரு தனிமனிதனும் நம்மண் ணின் விடுதலையையும், அதற்காக முழுப் பங்களிப்புச்செய்கிற எமது தமிழீழ விடுதலைப்புலிகள் போன்ற இயக்கத்தையும் நம்பி ஆதரிக்கிறார்களெனக் கண்டு உள்ளம் நிரம்பிய நிறைவுடன் பெரியவர் தொடர்ந்து சொல்லப்போவதைக் கவனிக்கத் தன் காதுகளைக் கூர்மையாக்கிக்கொண்டான் ராசன்.

ஆசையப்பா சொல்லத்தொடங்கினார். அவரின் முகம் ? திரும்பவும் வேதனைக்கோடுகளைத் தன்முகத்தில் கீறிக்கொண்டது. "தம்பி இப்ப நேத்தல்ல, அப்ப ஆச்சிக்கும், இப்ப என்ரை மரியம்மாவுக்கும், இன்னும் எத்தினைபேருக்கோ நான் அடிக்கடி

சொல்லிக்கொள்ளுவன், என்ரை சீவன் அடங்கிறதென்டால் அது மறுமனுசாளைப்போல பாயிலே, படுக்கையிலேயில்லை. ஏனென்டால் நான் தொளிலாளி. என்ரைகையாலே இந்தக்கடலிலே நான்பிடிச்சமீனைக்கொண்டந்து, வீட்டிலேயொரு அவியலோ, கொதியோவைச்சு அதையாசையோடை நான்திண்டுவிட்டுக். கடவுளே, மடுவிலாச்சியெண்டு கண்ணைமூடவேணும். தம்பி, அப்பிடியொரு ஆசைதான்ராமேனை என்ரை கடைசியாசையா இருந்தது. அது இனி நடவாது? அந்த ஆசை நிறைவேறுது? சூசை கேவிக்கேவி அழுதார். அவருடைய பார்வை ஏதோவொரு வேட்கையோடு கடலையே வெறித்துக்கொண்டிருந்தது..

ராசனுக்குச் சந்தேகமாக இருந்தது. இந்தமனுசன் தற்கொலையேதேனும் பண்ணிப்போடுமோ? அல்லது இந்தக்கெடுபிடி நேரத்திலை மரத்தைவலிச்சுக்கொண்டு கடலுக்குள்ளை போய், உந்த இந்திய, சிங்களராணுவ, நேவிக்காரங்களாலை அநியாயமாய்ச் சுடுபட்டுச்சாகப்போகுதோ? என்ன யோசினையோடு இந்தஇடத்திலைவந்து இந்தாள் குந்தியிருக்கு. ஒன்றுமே புரியாது சிந்தனையை மூடவிட்டான்.

"என்னதம்பி கடுமையாய் யோசிக்கிறாய்?" சில நிமிடத்தின் பின் சூசை இந்தக்கேள்வியைக்கேட்டதும்தான் ராசன் அவரிடம் கேட்டான்; "அதுசரி சூசையப்பா, உலகமே எங்கடை பிரச்சினை எப்ப தீருமென எதிர்பார்க்குது. எங்கடை சனங்களும் எப்ப நாங்கள் நிம்மதியாக இருக்கிறதென ஏங்கிக்கொண்டிருக்குதுகள். நீங்களொரு உழைப்பாளி தொடர்ந்தும் உழைத்து வாழ முடியவில்லையேயென்று ஏங்கிறியள். உண்மையாய்ச் சொல்கிறேன், எங்கட தமிழ்ச்சனத்திலை முக்காவாசிக்குமேலை என்ன கதைக்குதுகள் தெரியுமே? முந்தி எவ்வளவு நிம்மதி, இலவச அரிசியைவாங்கித்திண்டுபோட்டுக் கொழுப்பிலை நிண்டு ஊர்க்கதை கதைப்போம். குடும்பத்திலை ஓராள் உழைச்சால் அது எல்லாருக்கும் போதும். மற்றவை தங்கடை பிராக்கு. இப்ப எவ்வளவு

கரைச்சல், இத்தோடை....." ராசன் கதைசொல்லிக்கொண்டிருக்கும்போதே குசையப்பா இடையே குறிக்கிட்டு"தம்பி, தம்பி, தம்பி கொஞ்சம்பொறுமேனை. நான் சில வேளையிலை நினைக்கிறனன்; மெய்யாத்தான் தம்பி சொல்லுறன், இந்தச் சனங்கள் திருந்தவேணுமெண்டா இஞ்சை நடக்கிற இந்தச் சண்டை காணாது. இதைவிட இன்னும் இதுகள் வதைபடவேணும். ஒந்தம்பி, ச்சச்சய்... கேவலங்கெட்டதுகள். தம்பி ஆண்டவர் மனிசனுக்கு இந்தக் கையையும், காலையும், புத்தியையும் ஏன்படைச்சவரெண்டு நினைக்கிறியள். எட இந்த மனிசன் தன்ரைபாட்டைத் தானே பாக்க. இதுகளென்னெண்டால், இளவட்டங்கள் சயிக்கிலையும் எடுத்துக்கொண்டு, சந்திக்குச் சந்தி, பள்ளிக்கூட வாசல் கடையள்ளை, பெட்டயளைப்பாக்க, வைஸ்கோப், அப்பிடி. பெண்டுகள் ஊர்த்துளாவாரம். இதுமட்டுமை ஆம்பிளையள், பெண்புரசு எல்லாருமா, அவன் பெரியவன், இவன் சின்னவன், அவனின்னூர் எண்டு கண்டறியாத சாதியள். ஏன்தம்பி கனக்க, உன்னைப்பற்றி இஞ்சை கதைக்கிறதுகள் உனக்குத்தெரி, யுமே?

உஎன்ன கதைக்கினம்?"

"தம்பி, நீ ஆரோ எவரோ, நீ இந்த வடமராட்சியிலை நிக்காத இடமில்லைப் போகாத ஊரில்லை. ஊரடங்குச்சட்டக் காலங்களிலை கூட, ஆருக்கு என்ன கஸ்டம், ஆற்றவீட்டிலை செல் விழுந்துட்டாலும், பெண்புரசை ஆசுப்பத்திரிக்கு கொண்டுபோக எதுக்கும் அந்தஇடத்திலை நிண்டு அநேத இரட்சகனு உதவி செய்திருக்கிற, இப்பவும் செய்கிற. அப்பப்ப உன்ர உதவிபெற்றவங்கள் மகராசனெண்டு கையெடுத்துக்கும்பிடேக்கை உனக்கு றொம்பச் சந்தோசமாக இருக்கும். ஆனா நீயில்லாத இடத்திலை இந்த ஈனப்பயலுகள் கதைக்கிறது.....ச்சே....

"சொல்லுங்கோ" எல்லாம் தெரிந்திரிந்தும் தெரியாதது போலக்கேட்டான் ராசன்.

"சொல்லுறன் தம்பி, சொல்லுறன். ஆனுக்காள் மூலைக்குமூலை உன்னைக்காணேக்னக பல்லைக்காட்டிப்போட்டு, நீ

போனபிறகாலை அவன்ரையாக்ளென்றதும், இவன்ரை சாதியென்றதும். தம்பி எத்தினைவருசம் இஞ்சை என்னபுரட்சி வந்தாலும் நான்முன்னமே சொன்னமாதிரி இவங்கள் திருந்தவே மாட்டாங்கள்.

"பூசையப்பா நீங்களென்ன நினைக்கிறியள்"

"தம்பி நானொரு கலைஞன். என்னை அண்ணாவி பூசை எண்டும் கூப்பிடுறவங்கள். எனக்கு, நல்லதைச்செய்யிற மனிசரெல்லாம் தெய்வம்மாதிரி. உன்னைப்பாத்தா, சைவசமயம் சொல்லுதே அப்பப்ப அவதாரமெடுக்கிற கடவுள் விஷ்ணுவோ, கிருஷ்ணரோ ஒருதெய்வம். அந்தமாதிரித்தான் நான் நினைக்கிறன். அதோடை இன்னொரு தீர்மானமும் வைச்சிருக்கிறன். மோனை, மற்றவை நினைக்குமாப்போலை நீ அணாதையில்லை. நீயொரு நல்ல பண்பட்ட விடுதலை இயக்கத்தொண்டன்?" அப்படித்தானே என்பதுபோல அவரது புருவம்இரண்டும் கேள்விக்குறியாக நின்றது. ராசன் எந்தவித முகக்குறிப்பையும் வெளிப்படுத்தவில்லை.

"அதுசரிமோனை நீ எப்ப பாத்தாலும் ஒருமாதிரியாக இருக்கிறாய். உன்ரை தலையே சீப்புப்பட்டு மாதக்கணக்குப்போல கிடக்கு. ஏதேனும் கவலையே."

---




விஷேட பயிற்சி பெற்ற துப்பறியும் நாய்களுடன் சேர்ந்து இப்பொழுது அமைதிப்படை புலிகளைத் தேடிவருகிறது.

— செய்தி —

www.padippakam.com


"அப்பா, நான்மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ இளைஞர்கள் என்னைப்போல."

"அப்பிடியெண்டால்"

"ஒரு பெண்ணுக்கு என்னைக்கொடுத்திருந்தால், அவள் விருப்பத்துக்குத்தக்கமாதிரி என்னைச் சிங்காரிச்சிருப்பன். நாங்கள் இந்த மண்ணுக்கெல்லோ எங்களைக்கொடுத்திருக்கிறோம். எங்கட பூமி அடிமைப்பட்டுக் கவலையும் கண்ணீருமாக இருக்கும்போது அவள் எங்கட வசதிகளை, அழகுகளையல்ல. எங்கட உதவியைத் தான் இப்ப கேட்கிறு. இந்தநேரத்திலை எங்கட கடமைதான் எங்களுக்குமுக்கியம்."

"அது முழுமெய்தான் தம்பி."


தூரத்திலே ட்ரக் வண்டியின் உறுமல்சத்தம் ராசனின் காதுக்குக் கூர்மையாகக்கேட்டது. அவன் பயத்தையோ பதட்டத்தையோ காட்டிக்கொள்ளாமல், "அப்பா பொழுது நல்லாப பொலபொலவென விடியுது. இனியும் இங்கைநிண்டால் கூடாது. வாங்க ஊர்மனையுக்கை போவம்."

"தம்பி வா மரியம்மாவைக்கொண்டு ஒரு கோப்பி, தேத்தண்ணி குடிச்சிட்டுப்பேசுவம்."

தமிழீழத்தில் இன்று எல்லோருமே அவனுக்கு அன்னை, தந்தை. யாதும் ஊரே......

---

தமிழீழ விடுதலைப் புலிகளின் குரல்



97.840225
97.402154

படிப்பகம்

லேக உரை:

# வாசற்கதவை வடிவாகப் பூட்டுங்கள்!

துன்பங்கள் சுமந்து சோதனைகள் கடந்து
நெருப்பினில் குளித்து நிற்கும் தமிழீழக் கரங்களே.!
வாசற்கதவை வடிவாகப் பூட்டுங்கள்..!

எமது தாயக மண்ணில் நெருப்பெரிந்த போதும்
குமுதினிப் படகும், குருநகர்ப்படகும் குருதியில் நனைந்து
திருமலைக்கடலும், மன்னார்க்கடலும்
தணலிடை வெந்து இரத்தத்தால் சிவந்தபோதும்

சென்னை மெரீனக் கடற்கரையில் உடற்சதை
குறைக்க ஓடி உலாவிய வட்டுக்கோட்டை தலைவர்கள்
வாக்குக் கேட்டு வருகின்றனர். வாசற்கதவை வடிவாக பூட்டுங்கள்

மங்கையக்காவின் கணவனுக்குத்தான் மானரோசம்
இல்லையென்பது தெரிந்தகதை! உடுப்பிட்டிச் சிங்கமே!
நீயுமா உணவில் உப்புச் சேர்த்துக்கொள்ளவில்லை?
வரதராசப்பெருமாளே நீயுமா கூட்டணியுடன் கூட்டு?

டெல்லியில் குரங்காட்டி கையாட்டுகிறன்
தமிழீழத்தில் அவன் பழக்கிய குரங்குகள்
குத்துக்கரணம் மடிக்க வருகின்றன.

சிவஞானசுந்தரம், சந்திராபெணன்டோ, கிருஸ்ணானந்தன்
என்னும்..என்னும்..நூறுக் கணக்கானவர்களின்,
இரத்தம் பட்ட கைகளைக் கழுவிவிட்டீர்களா?
தமிழ் மக்களை ஆள்வதில்தான் யார்யாருக்கெல்லாம் ஆசை.


பரந்தன் ராஜனுக்கும் பதவி மோகமாம்?
துரோகக் கும்பலுக்கு எவ்வளவு துணிவு?
கொள்ளைக்காரருக்கும் கொள்கை விளக்கப் பிரசுரங்களா?

இவர்கள் பகலில் புள்ளடிக்கும் இரவில்
கொள்ளையடிக்கவும் கதவைத் தட்டுவார்கள் கவனம்!
விலைபேசப்பட்ட அடிமைகள் வீதியில் வருகிறார்கள்
வாசற்கதவை வடிவாகப் பூட்டுங்கள்.



நன்றி: செய்திக்கதிர்
அவுஸ்திரேலியா.

www.padippakam.com



# சோசலிச தமிழீழத்தில்..!

**பெண் விடுதலை :**

தமிழீழ சனத்தொகையில் பெரும் பான்மையினராக விளங்கும் தமிழ்ப் பெண்கள், அரச ஒடுக்குமுறை ஒரு புறமும் சமூக ஒடுக்குமுறை மறுபுறமுமாக, இரு துருவ அழுத்தங்களால் நசுக்கப்படுகிறார்கள். தேசிய ஒடுக்குமுறையின் நேரடியான தாக்கத்தை எதிர்கொள்ளும் எமது பெண்கள் அரச பயங்கரவாதிகளின் கையினால் மிகவும் கொடூரமான அட்டூழியங்களுக்கு ஆளாகி வருகிறார்கள். ஈழத்தின் பெண் குலம் மௌனமாக அனுபவித்துவரும் துன்பங்களும் அவர்கள் புரிந்துவரும் அற்புதமான தியாகங்களும் எமது விடுதலைப்போராட்ட வரலாற்றின் மகத்தான சிறப்பம்சமாகும். அரச பயங்கரவாதம் மாத்திரமன்றி எமது சமுகத்தில் நிலவும் ஒடுக்குமுறைகளும் பெண்ணினத்தை துன்புறுத்துகிறது. சீதன முறை, ஆணாதிக்கம் மற்றும் பிற்போக்கான சமூகப் பண்பாட்டுமுறைகள் எமது பெண் குலத்தை இழிமைப்படுத்துகிறது; அவர்களது சமத்துவ உரிமைக்கு சவாலாக அமைகிறது; அவர்களது கௌரவத்திற்கு மாசு கற்பிக்கிறது.

அரச ஒடுக்குமுறையிலிருந்தும் சமூக அடக்குமுறையிலிருந்தும் தமிழீழப் பெண்ணினத்திற்கு விடுதலையை பெற்றுக்கொடுப்பதோடு அவர்களது மேம்பாட்டிற்காக உழைப்பதே எமது விடுதலை இயக்கத்தின் குறிக்கோளாகும்.

நாம் அமைக்கவிருக்கும் சுதந்திர தமிழீழத்தில் சீதன ஒடுக்குமுறை சட்ட ரீதியாக ஒழிக்கப்பட்டு பெண்களின் சம உரிமைகளும் சம சந்தர்ப்பங்களும் அரசியல் அமைப்பு வாயிலாக உத்தரவாதமளிக்கப்படும். தேசிய வாழ்விலும், அரச நிர்வாகத்திலும், சமூகப் பொருளாதார கட்டுமானப்பணிகளிலும் சரிசமப் பங்கேற்று உழைக்க பெண்களுக்கு வாய்ப்பளிக்கப்படுமென நாம் உறுதிகூறுகிறோம். பெண் பிள்ளைகளுக்கு கல்வி கட்டாயமாக்கப்படுவதுடன், தொழிற் துறையில் பாலின வேறுபாடுகள் நீக்கப்படுமெனவும் உறுதியளிக்கிறோம்.

புரட்சிகரமான பெண் இயக்கம் உருவாக்கப்பட்டு தேசிய ரீதியில் ஈழ மாதர் சமூகம் தமது வாழ்க்கை நிலையை மேம்படுத்த எமது இயக்கம் ஊக்கமளிக்கும். எமது இயக்கம் முன்னெடுக்கும் ஆயுதப் போராட்டத்திலும், வெகுசன அரசியல் போராட்டங்களிலும் பெண்கள், பங்குபற்றி வருகிறார்கள். தமிழீழப் பெண்ணினமும் எமது விடுதலை இயக்கத்திற்குப் பின்னால் அணிதிரண்டு முழுமையாக தங்களது பங்களிப்பை செலுத்தும்போதுதான் எமது தேசிய விடுதலைப் போராட்டம் முழுமை பெற்று வெற்றிப் பாதையில் வீறுநடைபோடும்.

புலிகளின் தாகம்!
தமிழீழத் தாயகம்!

புரட்சிக் கருத்துக்கள்
புயலாக வீசும்
புதிய நாடகம்..!

www.padippakam.com




படிப்பகம்

Egmon B. Jensen Bogtryk – Herning